புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பட்டது

(1889) ஸ்தாபிதம்

இந்து சாதனம்.

THE HINDU ORGAN.

['ரேலிபோன்' இல. 56.]

பத்திரிக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு	ரூ.	5-00
இலங்கை, இந்தியா:	" ரூ.	8-00
தொலைப்பகுதி:	" ரூ.	9.00
தனிப்பிரதி:		சதம் 5

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு:—ஒருகலம்		ரூ 10-00
"	அரைக்கலம்	ரூ. 5-00
"	கால்கலம்	ரூ. 3-00

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—சந. } யாழ்ப்பாணம்;-பிரசோற்பத்தி ௵ புரட்டாதி ௴ அ௳, (1931 செப்டெம்பர் 24௳) வியாழக்கிழமை. { இலக்கம்—உச.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
செம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
ஏர்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது துங்கப்
நிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றன் வணங்கி வாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள

கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப் புகழ்பெற்றது. மிக இலேசானது. மலிவானது. ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன்துறையிலே சுவமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாள முள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.
(Y. 9 8 1—31 12 31.)

ஸ்ரீகதிரைமலைத் திருப்பணி.

கலிவிருத்தம்.

திருமலிந்திடு தென்னிலங்கையின்
மருவுசண்முகன் மலையினன்பணி
புரியவேசிறு பொருள்கள்வேண்டுநீர்
அருளியாங்கவனருள் பெற்றுய்ம்மினே.

தருமசீலர்களே!

உலகிலுள்ள எவ்வகை ஆத்மாக்களுக்கும் தம்முடைய அருட்செல்வத்தை வரையாது கொடுக்கும் வள்ளலாகிய அறுமுகப் பெருமான் கோவில் கொண்டருளிய ஸ்ரீகதிரைமலையிலமைந்திருக்கும் விவேகானந்த மடத்தில் தாகமுற்றடைந்தோர்க்குத் தாக சாந்தி செய்விக்கப்பட்டு வருகிறது. அன்றியும் முன்னே அம்மலைக்குச் செல்வோர்க்கு அதிக கஷ்டத்தை விளைத்த சுற்று வழிகளை நீக்கி இப்போ அதிக சமீபமாகிய வழியைத் திறந்து நூற்றைம்பது படி வரையில் பல பெரியோர்களது முயற்சியினாலும், திரவியோபகார சகாயத்தாலும் செவ்வனே கருங்கற் கட்டடமாய்க் கட்டப்பெற்றுள்ளது. எஞ்சிய கருங்கற் கட்டடத் திருப்பணியை முற்றுவித்தற்கு இப்போது பொருளுதவி வேண்டும். ஆகையால் பணம் அனுப்புவோர், தெளிவாகத் தங்கள் விலாசத்தை யெழுதி கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—R. சிந்தாமணி அவர்கள்,
கச்சேரி யாழ்ப்பாணம்,
மேற்பார்த்து ரவண சங்க சாது வசம்
கொடுப்பது.

(H. Y. 9. 8-6&7 12-31)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அனேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தின் உலகனன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதிந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, குமாரஸ்தாகர, பிதாரு, சாலாமுகலி, சப்பேமுதஸ்லி, பிஸ்தாவு, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, காகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அனேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீர்ப்பிடிப்பு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருமலுடித்தலுடன் உண்டாகிறுகும் பக்கவாதம், இருமல், காசம், பித்தக்காமாலை, பித்தபாண்டு, பீனிசம், மேகங்கால் வாதம், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் ரோகங்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை முத்தல் ஒன்றுக்கு ரூபா உ.0. அரைமுத்தலுக்கு ரூபா ௧0. கால் முத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொலைவான பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததினால் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
இலங்கை.

(Y 75. 31-12-31.)

திறம் கொளுக்கி ஓடுகள்.

மோர்கன், நட்சத்திரம் 14, இஞ்சுப் பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங்கசியா. அண்டப் பார்த்தாப் போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்

விற்கும் இடங்கள்:—
யாழ்ப்பாணம்:—
மு. இராசேந்திரமுப்பர்
கிட்டங்கித்தெரு.
பரித்தித்துறை:—
மு. நமசிவாயம்
கடைத்தெரு.
ஊர்காவற்றுறை:—
காம்பன்.
திருக்கோணமலை:—S. சின்னையா
வில்லூண்டி.

(H 12. 10 1 32.)

உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ 4 (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½ (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ 4 (4) விநோதரசமஞ்சரி ரூ. 2 (5) அராபிக் கதை ரூ 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிபுராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும உரையும் ரூ. 3. (9) காலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகசாலைக்கு
→ இனம். ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்

(Y 7 7 9—8 9-32)

Established 1909 **A S. M. A. Khader Brothers**

மருந்தேயாயினும் விருந்தோடுண், என்ற ஔவைப்பிராட்டியாருரைப்படி
இந்த விளம்பர முழுதும் தாங்களும் வாசித்து
தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசித்துக் காண்பியுங்கள்.
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக்கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லையுயிர்க்கு. (குறள்.)

தன்பழமுடைய சம்பூமிசேயாதலால் மூவகைத்தோஷத்தாலும் பிணிவராதளவில் நடுப்பதமாகிய நல்லவிதமாகிய அவிழ்தங்களை உண்டவர்களுக்கு பிணியால் துன்பமில்லையென திருவள்ளுவநாயனுர் கூறிய திருக்குறளைபுணர்ந்த அறிவிற்சிறந்த அன்புடையோரே அருந்தக்கடவீர்களாக.

நாதங் கெட்ட தேகத்தைக் காக்கும்; நாட்பட்டரோகத்தைப் போக்கும்.
உங்கள் பணத்திற்கும் மருந்தின் குணத்திற்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது.
நிகரற்றது! குணமுற்றது!! மகிழ்வுற்றது!!! புகழ்பெற்றது!!!!

ஜீவானந்த தாது விர்த்தி லேகியம்.

ஓ! அன்பர்காள்!! ஒருவனுக்கு வீரியத்தில் ஏதேனும் விசாப்பமுண்டாயிருக்கின் அவன் எவ்விதசந்தோஷத்திற்குரியவனாயினும் வீரியக்கேடேவின் காரணத்தமாகவே அவன் மனதிற்கு மேலும் மேலும் விசனத்தைத்தான் உண்டாக்கச்செய்யுமென்பது ஆயுர்வேத சாஸ்திரங்களின் துணிபு தவிர, இராஜாங்க வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதுவே, நபுஸகம், அல்லது பேடித்தனமென்று சொல்லப்படும் அவ்விதத்துக்கரமான கொடிய வியாதியை அடியோடுதொலைத்து உலகின் வாழ்க்கையில் என்றுங்காணுத ஆர்த்த சுகாதாரவின்பத்தையடையச் செய்விப்பதில் இந்த ஜீவானந்த தாது விர்த்தி லேகியமே மிகவுஞ் சிறந்தது. இந்த லேகியத்தின் முக்கிய குணமாவது: இளமைப் பருவத்தில் பற்பல துர்ச்செய்கைகளினுல் நடுப்பிராயத்தில் தேஹபலங்குன்றி நரம்புகள் தளர்வடைந்து இரத்தம் கெட்டுப்போய் சந்தானவிர்த்தியில்லாமல் வயோதிகர்போல் மயங்கிநிற்கும் புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகி பிரமேகச்சூட்டால் நாதம் நீர்த்து ஜலம்போல் நீற்ற, கைகாலசதி மலசிக்கல், பசியில்லாமை ஜீரணக்குறைவு, சீதபேதி, ரத்தமேகம், ஸ்வப்னஸ்கலிதம், துரிதஸ்கலிதம், மூளையின்கொதிப்பு கண்ணெரிவு, தேகஅனல் இடுப்புவலி நீர்க்கடுப்பு, நீரெரிச்சல், நீர்சுருக்கு முதலிய சர்வரோய்களையும், ரோய்க்குத் தக்கபடி 40, அல்லது 20 நாளில் பூரணமாய் சுகப்படுத்தி, இரத்தத்தை சுத்திசெய்து தங்கள் தங்கள் சுபாவத்திற்கு மேலான வீரியத்தையும், மனவுற்சாகத்தையும் உண்டாக்கி, இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, தேகசக்தி, சந்தானவிர்த்தி, முதலிய நலன்களைச் செய்வதில் இதுபோல மேலானதென்றும் கடவுளுக்குப் பொதுவாய் உறுதியாகச் சொல்லுகின்றோம். அப்படி இதில் சுருக்கமாய் காட்டியுள்ள குணாலத்திற்கு மேற்கொண்ட பலனையடையவில்லையென்று கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின்பணத்தை உடனே வாபீஸ் செய்விக்கப்படும். அப்படி டை கிரயத்தை கொடுக்கத் தவறினுல் கோட்டுமூலமாக வசூல் செய்து கொள்ளலாம். மேலும் இம் மருந்தின் குணாலத்தைப்பற்றிச் சந்தேகிக்கிறவர்கள், நமது மருந்தாலயத்திற்கு நேரில்வந்து தங்கள் தங்களுக்குரிய சந்தேகத்தை போதுமானவரையுமுன்னிவாரணை செய்துகொண்டு வாங்கலாமென்பதையும திண்ணமாய் கூறுகின்றோம்.

40 நாள் 80 வேளை டப்பி 1க்கு கிரயம் ரூ 8 0 0
பரீட்சிக்க 20 நாள் 40வேளை டப்பி 1க்கு ரூ 4 0 0

வி பி தபால் சார்ஜ் பிரத்தியேகம், முற்பணமனுப்பினுல் வி. பி. தபால் செலவு இனமாய் அனுப்பப்படும். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், சிறம்பான், கோலாலம்பூர் ஆகிய ஐக்கிய மலாம் நாட்டு வாசர்களும் மருந்தின்கிரயமும் தபால்செலவு ரூ 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டை பிறதேசவாசர்கள் அட்வான்ஸ் அனுப்பினுல், பாக்கி தொகைக்கும் வி. பி. யில் அனுப்புவோம். ஆர்டர் செய்பவர்கள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டெழுதவும்.

Our Sole Agent:
P. M. Abdulcader Esqs,
Ceylon Post Agency
No. 105, Piachaud's Lane Maradana,
Colombo, Ceylon.

எமது விலாசம்:
☞ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் மெடிக்கல் ஹால்
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா,
இந்தியா.

(Y. 15. 6-7-31—5-7-32.)

இந்துசாதனம்

யாழ்ப்பாணம்: பிரசோற்பத்திஸு
புரட்டாதிமீ ௮௳ வியாழக்கிழமை.

காலத்திற்கு ஏலாக் கல்வி.

ஆங்கிலக் கல்வி வாயிலாக எவ்வகையான உத்தியோகத்தையும் பெறுதல் இனிமேல் முடியாதென்ற எண்ணம் இங்குள்ள பெற்றோரிடத்தும் பிள்ளைகளிடத்தும் பிறக்கலாயிற்று. இதனுற் பெற்றோருட் பலர் தங்கள் பிள்ளைகட்குக் கல்வியூட்டுவதிலும் பிள்ளைகளுட் பலர் தாங்கள் கற்பதிலும் ஆர்வங் குறையலாயினர். மேலும் பணமுட்டும் தமக்கு முயற்சியின்மையுங் காரணமாக அனேக பெற்றோர் தம் பிள்ளைகளை ஆங்கில வித்தியாசாலைக்கு அனுப்பும் விஷயத்திற்பின் நிற்கின்றனர். ஆர்வத்துடன் படித்துவந்த பிள்ளைகளுட் பலர் படித்துவிட்டுச் செய்வதென்ன என்றெண்ணிப்போலும் படிப்பை அலட்சியஞ் செய்கின்றனர். ஆங்கிலங் கற்றுவந்த பிள்ளைகளுட் சிலர் தமிழ் கற்பின் தமிழுபாத்தியாயராகவாயினுஞ் சேர்ந்து சீவனஞ் செய்யலாமென்ற எண்ணத்தினுல் ஆங்கில வித்தியாசாலையை விடுத்துத் தமிழ் வித்தியாசாலைக்குப் பழையபடி செல்கின்றார்கள். இதற்கிடையில் தமிழ் உபாத்தியாயர்கட்கும் மானமில்லையென்று கண்டமாத்திரத்தே ஆங்கிலம் விடுத்துத் தமிழ் பயிலப் புகுந்தாரும் ஏக்கங் கொள்வாராயினர். இக்காலத்துக் கல்வியாலான பயன் இப்படியிருப்பினும் கல்வியையூட்டும் அரசினரும் வித்தியாசாலைகளை வைத்து நடத்துவோரும் என்ன செய்கின்றார்களென்பது சிந்திக்கத்தக்கது.

வித்தியாபகுதியார் தாம் முன்னர்க் கல்வியை எந்த முறையாக ஊட்டி வந்தார்களோ அந்த முறையாகவே இப்பொழுதும் ஊட்டி வருகின்றார்கள். கல்வியின்பொருட்டுப் பெற்றோர் முன் எவ்வளவு அதிகபணஞ் செலவழிக்கவேண்டியிருந்ததோ அவ்வளவு பணத்தையே இப்பொழுதுஞ் செலவழிக்க வேண்டியவர்களாயிருக்கின்றார்கள். புத்தகங்களின் விலை பள்ளிக்கூட வேதனம் விடுதிச்சாலைச்செலவு இவைகளுள் ஏதொன்றாயினும் இக்காலத்தில் விசேஷமாக இந்த யாழ்ப்பாணத்தில் எங்காயினுங் குறைக்கப்படவில்லை. சர்வகலாசாலைப் பரீட்சைகட்குரிய கட்டணப்பணத் தொகையும் முன் விதிக்கப்பட்டபடியேதா னிருக்கின்றது இவை மாத்திரமா, இக்காலத்தும் எக்காலத்தும் பயன்றரா விளையாட்டுக்களாகிய பந்தடித்தல் டிறில் அப்பியாசம் என்னுமிவைகளும் முன்போல் இப்பொழுதும் நடைபெறலாயின. இங்குள்ள எந்த ஆங்கில வித்தியாசாலையிலாயினுங் கல்லூரியிலாயினும் கைத்தொழில் கமத்தொழில் முதலியவற்றிற்காகிய பயன்றருங் கல்வி பயிற்றப்படுவதில்லை. ஆனல் இங்குள்ள தமிழ் வித்தியாசாலைகள் சிலவற்றில் தோட்டஞ்செய்தல், நூல்நூற்றல், நெசவு தொழில், பன்னவேலை முதலியன தமிழ்க் கல்வியோடு பயிற்றப்படுகின்றன. இவற்றுல் இப்பிள்ளைகள் பிற்காலத்திற் சிறிது நன்மையடைதலுங் கூடும்.

சென்ற இரண்டு மூன்றுவருட காலமாகப் பல்லாயிரக்கணக்கான வாலிபர்கள் ஸீனியர், ஜூனியர், மற்றிக், ஆங்கில எட்டாம் வகுப்பு (E. S. L. C.) முதலிய பரீட்சைகளிற் சித்தியடைந்த பின்னரும் பிழைப்பில்லாதவர்களாய்த் தங்கள் பெற்றோா உற்றோருக்கும் பூமிக்கும் பாரமாய்ச் சஞ்சரிக்கின்றார்கள். எத்தனையோ பெற்றோரும் வாலிபர்களும் நம்பி மோசம்போனவர்களானார்கள். எத்தனையோ வாலிபர்கள் பெருஞ் சஞ்சலத்துடன் காலங்கழிக்கின்றார்கள். இன்னும் எத்தனையோ வாலிபர்கள் சாத்தானுடைய கருமம் பார்க்கின்றார்கள். இனி, அரசினர் கீழ்ச் சில காலம் உத்தியோகம் பார்த்து அவாற் பணமுட்டுக் காரணமாகப் புறக்கணிக்கப்பட்டவர்களும், தேயிலைத் தோட்டம் றபர் தோட்டம் தென்னந் தோட்டம் முதலியவற்றிலும் வியாபார சமுதாயங்களிலும் கடமை பார்த்து இப்பொழுது தேவையில்லையென விடப்பட்டவர்களும், சிங்கப்பூரிலிருந்து உத்தியோகமில்லாமல் மீண்டு வந்தவர்களும் ஆகிய பலர் இங்கே அவலமுறக் காணப்படுகின்றனா.

இப்படியெல்லாமிருத்தலால், அரசினரும் வித்தியாபிமானிகளும் பயனற்ற இக்கல்வியை இங்குள்ள சிறுவர் சிறுமியாக்கு ஊட்டி அவர்களைப் பிற்காலத்திற் சஞ்சலப்படச்செய்யாது, தொழிற்கல்வி கமப்பயிற்சி முதலியவற்றை விர்த்திபண்ணுதற்கு முயலுதல் வேண்டும். வித்தியாபகுதியார் இதனைச்சிந்திப்பாராக.

யாழ்ப்பாணப் புகைரதம்.

இற்றைக்குச் சின்னாட்களின் முன்னே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சாயந்தரம் புறப்படும் புகைரதத்திலே இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளுக்குச் சயனவசதி யமைக்கப்பட்டதை யாவருமறிவர். அப்படி யமைக்கப்பட்ட வசதி இப்பொழுது அநேகமாக முற்றாய் உபயோகப்படுகின்றதாகத் தெரிகிறது. பிந்திப் போகின்றவர்களுக்கு இடமில்லாமையும் போகின்றது. ஆகவே இப்போதிருக்கும் பனிமிடிகாலத்திலே சற்றுச் சுகமாகச் சயனித்துக்கொண்டு பிரயாணம் பண்ணவேண்டிய பிரயாணிகள் விகிதங்குறைந்த இந்த வகுப்பையே பெரிதும் உபயோகப்படுத்துகின்றனர் என்பது வெளிப்படை.

இவ்வாறானவசதியை யுண்டாக்கிவிட்டதற்குக் காரணர்களாயுள்ளவர்கள் புகையிரத பரிபாலன ஆலோசனைச் சங்கத்தில் உள்ள அங்கத்தவர்களேயாகும். இப்பொழுதும் இச்சங்கத்தார், யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்குமிடையேபோகும் புகையிரதப்பாதை மோட்டர்வண்டியைச் சாயந்தரவேளைகளில், அதாவது கொழும்பிலிருந்து வரும் புகையிரதம் கிளிநொச்சியைக் கடந்தபின்னர், கிளிநொச்சியிலிருந்து புறப்படும்படியாகச் செய்யும்வண்ணம் புகையிரத பரிபாலனப் பகுதியாருக்கு ஆலோசனை கூறியிருக்கின்றனரென அறியலானேம். இது பிரதானமாகக்கமக்காருடைய வசதியை உத்தேசித்தே செய்யப்பட்டிருக்கின்றதெனலாம். ஏனெனில் கொழும்பிலிருந்துவரும் புகையிரதம் கிளிநொச்சியில் சாயந்தரம் 4 மணிக்கு முன்னதாகவே வந்துவிடுகின்றது. ஆகவே இந்தப் புகைரதத்தில், கிளிநொச்சி முதலிய இடங்களிற் கமவேலைசெய்பவர்களும் செய்விப்பவர்களும் தமது தினவேலையை முடித்துக்கொண்டு தத்தம் இல்லங்களையடைதல் பொருந்தாது. ஆனல் கிளிநொச்சியை விட்டு 5-30 அல்லது 6 மணிக்குச் சாயந்தரங்களில் ஒரு வண்டி புறப்படுவதாகவிருப்பது உள்ளபடியே கமக்காரர்களுக்குப் பெரும் வசதியையளிப்பதாகவேயிருக்கும்.

இச்சந்தர்ப்பத்தில், குறித்த ஆலோசனைச்சங்கத்தவர்கட்குச் சுட்டிக்காட்டுவதொன்றுளது. கிளிநொச்சியிலிருந்து 6 மைலுக்கப்பால் முறிகண்டியென்னும் ஒரு கிராமம் இருக்கின்றது. இங்கே ஒரு விக்கினேஸ்வரர் ஆலயமிருக்கின்றது. இந்த ஆலயத்திலிருக்கும் மூர்த்தி மிக வரத மூர்த்தியென யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக்களினுல் விசேடமாகவும், இலங்கை முழுவதிலுமுள்ளாரினுற் பொதுவாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த யாழ்ப்பாணப் பகுதிகளிலிருந்து தமது நேர்கடன்களைச் செய்வதற்குச் செல்லும் யாத்திரைகாரர் அநேகர் உளர். ஆனல் இவர்கள் வசதியாகப் போக்குவரவு செய்வதற்குப் புகையிரத வசதி கிடையாது. போகவேண்டியவர்கள் அநுராசபுரத்திற்குத் தெருவினுற் செல்லும் மோட்டர்பஸ் வண்டியிற் பிரயாணஞ்செய்து பின்னரும் அநுராசபுரத்திலிருந்துவரும் அவ்வண்டியிலேயே திரும்பவேண்டும். இந்த மோட்டர்பஸ் யாழ்ப்பாணத்தைவிட்டுப் புறப்படுவது அதிகாலையிலானமையால் இந்தநேரம் அநேகருக்கு வசதிக்குறைவையுண்டுபண்ணுகின்றது. இப்படியன்றி, தனித்து மோட்டர்ரதம் பிடித்துக்கொண்டே யாத்திரிகர்கள் செல்லவேண்டி யிருக்கின்றது இது மிகவும் அதிகமான செலவை யுண்டுபண்ணுவதாம். ஆகையினுல் புகைரதப் பரிபாலனப் பகுதியார் இந்த முறிகண்டியில் ஒரு தங்குமிட மேடையை யமைத்து காலையில் கிளிநொச்சிக்குப் போகும் 'றெயில் மோட்டர்' முறிகண்டி வரைக்கும் செல்லவும், இப்போது ஆலோசனைச் சங்கத்தார் புகட்டுமாறு சாயந்தரத்திலே கிளிநொச்சியிலிருந்து புறப்படும் றயில் மோட்டரை முறிகண்டியிலிருந்தும்புறப்படவும் அமைப்பரேல் அநேகர் இவ்வண்டிகள் மார்க்கமாக இந்த ஸ்தலத்திற்குச் சென்று மீளுவர். அன்றியும், யாத்திரை செய்யப் போகிறவர்கள் முறிகண்டியில் வசதியாகத் தங்கி தமது நேர்கடன் முதலான வழிபாடுகளைச் செய்வதற்கும் போதிய அவகாசம் இருக்கின்றது. இவ்விஷயமாக உள்ள கஷ்டத்தைப்பற்றி புகையிரத பரிபாலன ஆலோசனைச் சங்கத்திலிருக்கும் இந்துசமயியாகும் ஸ்ரீ காராளபிள்ளை முதலியார் அப்பகுதியாருக்கு எடுத்துரைப்பரெனநம்புகின்றோம். அநேகமாக இப்புகைரதப்பகுதி விஷயத்தில் யாழ்ப்பாணத்தவர்களின் வசதியை அவதானிக்கவேண்டியவர் இவரேயாவர். இவர் அவ்விதம் இதற்குமுன்னும் அவதானித்தே யிருக்கின்றனர்.

மேலும், பொல்காவலையிலும் தலைமன்னாரிலும் இந்தப் பிரயாணிகளின் போசன வசதியை யுத்தேசித்து அங்காங்கு இந்துப் போசனசாலைகளும் திறக்கப்படுமெனவும் அப்படியான ஒரு ஆலோசனையை சங்கத்தார் கூறியிருப்பதாகவும் அறியக்கிடக்கின்றது. இதுவும் விசேடமாகக் கண்டிப்பகுதியிலிருந்துவந்து பொல்காவலையில் மாறிப் பிரயாணஞ் செய்யவேண்டியவர்களுக்கும் தலைமன்னார் வழியாக இந்தியாவுக்குச்செல்லும் பிரயாணிகளுக்கும் பெரும் நன்மையாகக் காணப்படுகின்றது.

இதற்கு முன்னே இந்தப் போசன வண்டி யொன்று தலைமன்னார்ப் புகையிரத வண்டியுடன் சேர்த்து ஓடப்பெற்றது. அக்காலத்திலும் இந்த வசதிக்காகப் பாடுபட்டவர் ஸ்ரீ. காராளபிள்ளை முதலியாரேயாவர். ஆனல் அந்த வசதியைச் சனங்கள் உபயோகப்படுத்தாமையினலே புகையிரதப்பகுதிக்கு 3மாசத்திற்கிடையில் 3000ரூபாவரையில் நட்டம் ஏற்பட்டது. ஆகவே புகையிரதப் பகுதியார் அதை நிற்பாட்டி விட்டனர்.

உலகம் பலவிதம்.

ஏறக்குறைய ஆறுமாசகாலமாக யாழ்ப்பாணத்தில் மழைபெய்யவில்லையெனலாம். இலங்கையின் எப்பாகங்களிலும் மழை பெய்ய இங்கேதான் மழையில்லையே என்று இங்குள்ளார் பலர் கவலைப்படுகின்றனர். விஷயமறிந்த முருகேசு போன்றவர்கள், யாழ்ப்பாணத்தில் மழைபெய்யாமல் விடுவது நூதனமல்ல; மழை பெய்தால் அதுதான் நூதனம் என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இங்குள்ளாரிடத்துத் தெய்வநம்பிக்கை யில்லையாம்; தானதருமங்கள் அருகிவிட்டனவாம்; பெரியார் சிறியார், ஆண் பெண் என்ற பேதமில்லையாம்; எல்லாருஞ் சரியாம்; எல்லாஞ் சரியாம்; பாவ புண்ணியங்கட்கு வேறுபாடில்லையாம்; அந்தணர் ஒழுக்கந் திறம்ப, அரசர் முறை திறம்ப, வணிகர் சோரவியாபாரஞ் செய்ய, வேளாளர் தந்தொழில் விட்டுப் பிறதொழில் செய்யத் தலைப்பட்டு "வேளாளனென்பான் விருந்திருக்க உண்ணுதான்" என்னுங்கொள்கையை மறந்து உலோபத்துவமடைய, ஏனைய தாழ்ந்த வருணத்தார் சமத்துவம்பேசித் தலைதடுமாற, எல்லாருங் கள்ளுக்குடிப்பது எந்த விதமாக என்று யோசிக்க, கொலை களவு சூது அடிபிடி கலகம் அதிகப்பட, அரசினர் சமயவிஷயங்களில் மாறுபாடாகப் பிரவேசிக்க, பகை பழி பாவம் பல்க, அதிகாரிகளும் ஊரவர்களும் 'ஆள் மூட்டோ புலி மூட்டோ' என்றவிதமாகப் பரஸ்பரம் சந்தேகத்தோடும் அயநம்பிக்கையோடும் ஊடாட, வேலி பயிரை மேய மழை எப்படிப் பெய்யுமென்று ஆட்சேபிக்கிறார் முருகேசு.

* * *

சீனி, தேயிலை, அரிசி, எண்ணெய், தேங்காய் முதலிய பொருள்களெல்லாம மிகவும் மலிந்தபின்னரும் தேநீர், பணிகாரம் என்னுமிவைகளை முன்னர்ப்போற் கூடியவிலைக்கு விற்பது நீதியல்ல என்று தேநீர்க் கடைக்காரருக்கும பணிகாரக் கடைக்காரருக்கும் பலமுறை ஓலமிட்டுச் சொன்னேம. ஆனல் அவர்கள் சிறிதேனும் மனம் இளகவில்லை. எவ்வளவு விலையை ஏற்றி விற்றாலும் வாங்கி அருந்துவதற்கு ஆட்களிருந்தால் கடைக்காரர் ஏன் குறைக்கப்போகின்றார்கள். இந்தப் பதார்த்தங்கட்கு விலையை மட்டுப்படுத்த வொண்ணுதா என்று பட்டின சங்கத்தாருக்கு இட்ட முறையிடு காட்டுக்கெறித்த நிலாப்போற் பயனற்றதாய் முடிந்தது. கொள்வாருங் கொடுப்பாரும் ஒத்துக் கொண்டால் இடையிற் புத்தி சொல்லப் போபவருடைய பேச்சு வீண்பேச்சாய் முடிதலுஞ் சகசந்தானே.

* * *

அந்நியநாட்டுப் பொருள்களாகிய பீடி சிகரெற் முதலியவற்றைப் பகிஷ்கரிக்கப் புறப்பட்ட வாலிபர் சங்கத்தார் சிறிது சோர்வடைய, பகிஷ்காரஞ்செய்த கடைகள் பலவற்றில் பீடிக் கட்டுகளும், சிகரெற் தகரங்களும பழையபடி தலைகாட்டத் தொடங்கிவிட்டன. இவற்றை உபயோகிப்போரும் வெளிப்படலாயினர். தாமாகக் கனிந்தாலல்லாமல் தடிகொண் டடித்துக் கனிவித்த பழஞ் சுவை தாராதாம். ஊரவர்கள் தாமாக இவற்றின் தீமையை யுணர்ந்து தவிர்த்தாலல்லாமல் இந்த அந்நிய பொருள்களைத் தவிர்ப்பது சங்கடமென்று முருகேசு கவலைப் படுகிறார்.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

அப்பர்சுவாமிகள் தேவாரச் சிறப்பு.

இது கொழும்பு விவேகானந்த சபையிலே சுழிபுரம் விக்ரோறிய கல்லூரித் தலைமையாசிரியராகிய ஸ்ரீ சு சிவபாதசுந்தரம் (B A.) அவர்கள் செய்த உபந்நியாசத்தைத் தழுவி எழுதப்பெற்ற ஒரு சிறிய நூலாகும். சமய குரவருள் ஒருவராகிய அப்பர்சுவாமிகளெனப்படும் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிய தேவாரத்தின் பண்பு இந்நூலகத்துத் தக்க ஆதாரங்களோடு இனிது விளக்கப்பெற்றிருக்கின்றது. ஸ்ரீ சே வெ. சம்புலிங்கபிள்ளை யவர்கள் எழுதிய அப்பர் சுவாமிகள் சரித்திரச் சுருக்கமும் இதனோடு சேர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றது. பிரதி யொன்றன் விலை சதம் 10. நூலாசிரியரிடத்தும் கொழும்பு விவேகானந்த சபையாரிடத்தும் பெறற்பாலன.

முத்திரா லட்சணம்.

இது பழைய சுருதிகளிலிருந்து லோகோபகாரமாக, வட்டுக் கோட்டை, கண்ணலிங்கேஸ்வரஸ்வாமிகோயில் தர்மகர்த்தா, பிரமஸ்ரீ. க. குருமூர்த்திஐயரால் அவருடைய செந்தமிழ்ப் பரிபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது. பிரதிகள் பிரசுர கர்த்தரிடம் பெறற்பாலன. சைவக் கிரியைகள் செய்பவர்கட்கு இப்புத்தகம் மிகவும் பயனுடைத்தாம்.

எமக்கனுப்பிய பிரதிகளை உவப்புடன் ஏற்றுக்கொண்டாம்.

மோட்டரத அபாயம்.

சென்ற சனிக்கிழமை (19-9-31) மத்தியானம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியருளொருவராகிய மிஸ்டர் ஸ்ரீ C. சபாரத்தினமவர்கள் செலுத்தி வந்த மோட்டர் துவிசக்கிரம் எதிரே வந்த ஒரு மோட்டரதத்துடன் மோத ஸ்ரீ சபாரத்தினமவர்கள் காலில் ஊறடைந்தனர். துவிசக்கிரமும் சேதமுற்றது. பொலிசர் வியாச்சியந் தொடர்ந்திருக்கின்றனர்.

வழிமறித்துச் சருவியமை.

சென்ற திங்கட்கிழமை இரவு யாழ்ப்பாணம் றேயல்தியேட்டருக்கருகே போகும் றோட்டுவழியாக, பிரபல புடைவை வியாபாரியும் பெரியகடைக் குத்தகைகாருமாகும் ஸ்ரீ ச. நடராசா அவர்களும் அவருடைய கணக்கராகும் ஸ்ரீ முத்துக்குமாருவும் போகும்பொழுது நாலுபேர் வழியிலே காத்துநின்று ஸ்ரீ நடராசாவுக்கு வாளினுல் வெட்டியதாகவும் அவ்வெட்டு விழுவதற்கு முன்னரே முத்துக்குமாரு சருவியவர்மீது விழுந்து அவரின் கையைத் தட்டிவிட்டதினுல் நடராசாவின் மீது விழுந்த வெட்டு அதிகத் தாக்கமாக விழவில்லையென்றும், இப்பொழுது நடராசாவும் முத்துக்குமாருவும் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிலே சிகிச்சை பெறுகின்றனர் என்றும் அறிவிக்கப்படுகின்றது. இதைப்பற்றிப் பொலிசர் விசாரணை செய்கின்றனர்.

டாக்டர் விஸ்வலிங்கம்.

மலாயநாட்டிலே உதவி வைத்தியராகக் கடமைபார்த்தவரும் வரெழுவாசருமான இவர் இங்கிலாந்திற்குச் சென்று அங்கு கண்வைத்தியத்தில் விசேட அப்பியாசம் பெற்றுக்கொண்டு தமது உத்தியோகஸ்தானத்திற்குத் திரும்பும்மார்க்கத்தில் தமது ஜனனவூராகும் யாழ்ப்பாணம் வரெழுவில் சிறிது காலம் தங்கியிருக்கின்றனர்.

காரைநகர் நெசவுப்பாடசாலை.

இப்பாடசாலைக்கென ஓர் பிரத்தியேகமான கட்டிடம் அமைக்கும்பொருட்டுச் சென்ற ஆகஸ்ட்மீ 28௳ கொழும்புவெல்லம்பிட்டியா உத்தியோகமந்திரி ஸ்ரீ ஜே. ஜெயவர்த்தனு (மகாத்மாகாந்தியடிகளின் சிஷன்) அவர்களால் அஸ்திபாரக் கல்லு வைக்கப்பெற்றிருக்கிறது. ஷ பாடசாலை மானேஜர் ஸ்ரீ இராமலிங்கமவர்களும் ஆசிரியர் ஸ்ரீ ஈ. நவரத்தினமவர்களும் ஷ கட்டிட நிதிக்குக் காசு சேகரிப்பதற்காக இலங்கையின் தென்பாகத்துக்குப் போயிருக்கின்றனர். கடித.

இந்தியச் செய்தி.

நச்பி 19-9-31.

கூட்டமேசைச் சமாசத்தின் முதல் வாரம் முழுவதும் புதிய பிரதிநிதிகள் தம் தம் அபிப்பிராயங்களைக் கூறுவதிலேயே கழிந்தது. கடைசியான சில நாட்களுள் அகிலஇந்திய சம்யுக்த அரசாட்சிக்குரிய தேர்தல் விஷயமாக அது விவாதப்பிரச்சினைகளையும் செய்து முடித்துவிட்டது. திங்கட்கிழமை, அது, இராச்சிய மந்திர சபையின் இரு மந்திரங்களுக்குமிடையிலுள்ள சம்பந்தத்தைப்பற்றிய பிரச்சினைகளை ஆலோசனை செய்யும். இச்சங்கத்தின்வேலை கூடிய அளவு சீக்கிரமாக நடைபெறவேண்டுமென மஹாத்மா கூறிய அபிப்பிராயம் எல்லோருக்கும் உடன்பாடானதா யிருக்கின்றது பிருத்தானிய பிரதிநிதிகளும் - உண்மையில் எல்லாப் பிரதிநிதிகளும் - இதற்கு உடன்பாடுகாரராக விருக்கின்றனர். ஆகவே அடுத்த வாரம் முடியுமுன் சம்யுக்தராச்சிய மந்திர சபையின் இரு பகுதி மந்திரங்களுக்குமுள்ள சம்பந்தம், மந்திரசபையின் அங்கத்தவர் தொகை, தனதிகாரத்தைக் கொடுக்கும் பிரச்சினை யாதியன முடிவு கட்டப்படும்.

பேர்மாவும் வட்டமேசைச்சமாஜமும்.

றங்கூன் 20-9-31.

பேர்மாவிலேயுள்ள சனக்கட்சியார் ஒரு பகிரங்கக் கூட்டங் கூடினர். அக்கூட்டத்திலே (1) வட்டமேசைச்சமாஜத்தைப் பஹிஷ்கரித்தல் (2) சட்டமன்றத்தின் பிரதிநிதித்துவத்தைப் பரித்தியாகம் செய்தல் (3) பிரித்தானிய பொருள்களைப் பஹிஷ்கரிக்குமாறு சனங்களை வேண்டுதல், சட்டசபைக்கு அங்கத்தவர்களாக யாரும் செல்லலாகாதெனக் கேட்டல், அரசினர் நியமிக்கும் எந்த உத்தியோகத்தையும் யாரும் ஏற்றுக்கொள்ளலாகாதெனத் தடுத்தல் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சனக்கட்சியாரின் தீர்மானங்களைக் கொஞ்சத்திற்குக் கொஞ்சம் அரசினர் அங்கீகாரம் பண்ணுவதாகத் தோற்றுவதால், மேல் நிகழ்ச்சிகளுக்கு ஒவ்வ வட்டமேசைச் சமாஜத்திற்கு அனுப்பும் பிரதிநிதிகளைப்பற்றிய பிரச்சினைகளில் அதிகாரசங்கம் தக்கன செய்யலாம் என்று அதிகாரம் அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்திலே நடந்த விவாதங்களில், சிறுபான்மைக் கட்சியாரின் நன்மைக்காகத் தேவைக்கு மிஞ்சிய பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவதையும், அரசாட்சியாரின் பிரேரணைகளை அங்கீகரித்து ஆதரிக்கக்கூடிய கூட்டத்தாரி லிருந்து அங்கத்தவர்கள் நியமனம்பண்ணப்படுவதையும் அக்கூட்டம் தீர்மானமாகக் கண்டிப்பதாகவும் தெரியவந்தது.

ஆங்கில அரசின் அந்தரம்.

லண்டன் 20-9-31.

[இப்போது ஆங்கில அரசாட்சி பணவிஷயமாகப் படும் அந்தரம் சொல்ல முடியாதது] இன்று இரவிலே தொடக்கம் இதுவரையில் தங்கப்பவுணுக்கு ஸ்திரநியமனமாகத் தீர்மானித்து வைத்திருந்த பெறுமதியிலே நிர்ணயத்தை அரசாட்சியார் மீட்டுக்கொண்டனர். [ஆகவே இனிமேல் பவுண் விலை அப்போதைக்கப்போது ஏறியும் இறங்கியும் பெறுமதி யுடையதா யிருக்கும்].

(தொடர்ச்சி 5-ம் பக்கம்.)

சைவ போதம்.

(முற்றொடர்)

சிவாலய தரிசனம்.

ஸ்நானஞ்செய்து தோய்த்தசீலை உடுத்துக்கொண்டு கோயிலுக்குப்போகவேண்டும். கோயிலுக்குக்கிட்டப்போனவுடனே கால்களைக்கழுவிக் கோபுரத்தைக் கும்பிட்டுக்கொண்டு திருநந்திதேவரை வணங்கி "பகவானே அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசிப்பதற்கு அனுமதி தந்தருளும்" என்றுவேண்டிக்கொண்டு உள்ளேபோகவேண்டும் பின்பு பலிபீடத்தையும் நந்திதேவரையும் கும்பிடவேண்டும். அதன்பின் பிள்ளையாரையும், சிவலிங்கப்பெருமானையும், உமாதேவியாரையும், நடேசர் தட்சிணாமூர்த்தி சோமாஸ்கந்தர் சந்திரசேகரர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும் சமயகுரவர் நால்வரையுந் தரிசனஞ் செய்ய வேண்டும்.

பிள்ளையாரைத் தரிசனஞ்செய்யும்பொழுது முட்டியாகப்பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டிக் கும்பிடவேண்டும். கும்பிடும்போது வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நிற்கவேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் மூன்றுதரத்திற்குக் குறையாமற் செய்யவேண்டும். தலை, கைகள் இரண்டு, செவிகள் இரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு என்னும் எட்டு அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் அட்டாங்க நமஸ்காரம். தலை, கைகள் இரண்டு, முழந்தாள்கள் இரண்டு என்னும் ஐந்து அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம். பின்பு எழுந்து இரண்டு கைகளையுங் குவித்துத் தியானஞ்செய்துகொண்டு மெல்ல மெல்லக் கோயிலைச் சுற்றிவந்து பின்பும் சந்நிதானத்திலே நமஸ்காரம் செய்யவேண்டும். *பிரதட்சிணஞ் செய்தபின்பு, சண்டேசுரர் சந்நிதியை அடைந்து கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து, மூன்றுதரங் கைகொட்டி, சிவதரிசனத்தின் பலனைத் தரும்படி பிரார்த்திக்கவேண்டும். பின்பு சுவாமி சந்நிதானத்தில் வந்து ஒருமுறை நமஸ்காரஞ் செய்து வீட்டுக்குப்போதல்வேண்டும். ஒவ்வொருநாளுங் கோயிலுக்குப் போவது உத்தமம். ஒவ்வொருநாளும்போக இயலாதவர்கள் திங்கட்கிழமை வெள்ளிக்கிழமை பிரதோஷம் பௌர்ணிமை அமாவாசை திருவாதிரை கார்த்திகை மாசப்பிறப்பு சூரியகிரகணம் சந்திரகிரகணம் சிவராத்திரி நவராத்திரி விநாயகசதுர்த்தி விநாயகசட்டி கந்தசட்டி முதலிய புண்ணியகாலங்களிலாயினும் சுவாமி தரிசனஞ்செல்தல்வேண்டும்.

கோயிலுக்குப்போனால் வேடிக்கைகளை விரும்பாமல் சிவவழிபாட்டிலேயே மனதைச் செலுத்துதல்வேண்டும் இந்த ஊரிலே வருஷத்துக்கு இரண்டுமுறை பெரிய நீதிபதி விசாரணைக்கு வருகின்றார். அங்கே நாம் நிற்கும்பொழுது எவ்வளவு அமைதியாயும் பயபத்தியாயும் நிற்கிறோம். இருமல் வந்தாலும் அடக்கிவிடுகிறோம். நீதிபதிக்குமுன்னே இவ்வளவு பயபக்தியாய் நின்றால் நமது சக்கரவர்த்திக்கு முன் எப்படி நிற்போம். அப்படியானால் கடவுள் சந்நிதானத்திலே நாம் எப்படி நிற்கவேண்டும் நமது சக்கரவர்த்திக்கு இந்தப் பூமியில் ஒரு சிறுப்பகுதியுண்டு. இந்தப் பூமி முழுவதும் அவருக்கிருந்தால் அவர் எவ்வளவு பெரியவராயிருப்பார். இந்தப் பூமியிலும் சூரியன் பதின்மூன்று லட்சம் முறைபெரிது. சூரியனிலும் ஆயிரம்முறை பெரிய நட்சத்திரங்கள் கோடாநுகோடி இருக்கின்றன. இவைகள் எல்லாவற்றையும் உண்டாக்கிய சிவபெருமான் எவ்வளவு பெரியவர் என்பதை நன்றாகயோசித்துப்பாருங்கள்! உண்டாக்கியதும் எப்படி? உண்டாக்கவேண்டுமென்று அவர் நினைக்கவுமில்லை. அவர் இருக்க எல்லாம் உண்டாகின்றன. இப்படியானாற் சிவபெருமானுடைய பெருமை எவ்வளவு! பெரிய நீதிபதிக்கு முன்னே நிற்கும்போது இருமல் வந்தாலும் அடக்கிக்கொண்டு பயபத்தியாய் நிற்கவேண்டுமானால், சிவபெருமானுடைய சந்நிதானத்திலே நாம் எவ்வளவு பயபத்தியாய் நிற்கவேண்டும். கோயிலுக்குப் போகின்றவர்கள் இயன்ற அளவு தொண்டுசெய்வது உத்தமம். குடைபிடித்தல், விளக்குப்பிடித்தல், வாகனங்காவுதல், பூந்தோட்டத்துக்கு, நீர் பாய்ச்சுதல், கூட்டுதல், மெழுகுதல், முதலிய, திருத்தொண்டுகளில் ஒன்றுவது செய்தல்வேண்டும்.

கடவுளுடைய பரிசுத்தமான சந்நிதானத்தில் துன்மார்க்கிகளாகிய தாசிகளை வருவித்து நடனஞ்செய்விப்பது மகா பாதகமாகும். கடவுளுடைய சந்நிதியில் நாம் அவரைப் பயபத்தியுடன் வழிபடுவதற்குப் பதிலாகத் தாசிகளின் நடனத்தைப் பார்த்துக்கொண்டிருப்பது எவ்வளவு கொடுமை! அச்செய்கை கடவுளை எவ்வளவு அவமதிக்கிறதாக முடிகின்றது. திருவிழாக்களுக்குத் தாசிகளை அழைப்பவர்களும் அங்கே தாசிகளின் நடனத்தைப் பார்ப்பவர்களும் பெரும் பாதகஞ் செய்கிறார்கள். திருவிழா நடத்துகிறவர்கள் தங்கள் புகழுக்காகத் திருவிழாவுக்குத் தாசிகளை அழைக்கின்றார்கள். அதனாலே சனங்கள் அதிகமாய் வருவார்கள். சனங்கள் அதிகமாய் வந்தார்களாயின் திருவிழாச் சிறப்பாக நடந்ததென்று மற்றவர்கள் புகழுவார்கள் என்பது இவர்களுடைய கருத்து. இவர்களுக்கு அறிவு வராதானால், அறிவாளிகளும் யோக்கியர்களும் அப்படியான திருவிழாக்களுக்குப் போகாமல் விட்டால் அந்தவழியாகச் சனத்தொகை குறையும். சனத்தொகை குறையவே தாசிகளை அழைக்கும் வழக்கமுங் குறையும். தேவபத்தி உள்ளவர்கள் தங்கள் நன்மைக்காகவும், திருவிழா நடத்துகிறவர்களுடைய நன்மைக்காகவும், மற்றவர்களுடைய நன்மைக்காகவும் தாசிகள் அழைக்கப்படுந் திருவிழாக்களுக்குக் கிட்டவும் போகாதிருப்பார்களாக.

இன்னும் திருக்கோயிலிலே செய்யலாகாத குற்றங்கள்:—(௧) ஆசாரமில்லாது போதல், (௨) கால் கழுவாதுபோதல், (௩) எச்சில் உமிழ்தல், (௪) மலசலங்கழித்தல், (௫) மூக்குநீர் சிந்துதல், (௬) வெற்றிலை பாக்கு உண்டல், (௭) மூக்குத் தூள் போடுதல், (௮) போசனபானம்பண்ணுதல், (௯) ஆசனத்திருத்தல், (௧௦) சயனித்தல், (௧௧) காலைநீட்டிக்கொண்டிருத்தல், (௧௨) மயிர்கோதி முடிதல், (௧௩) சூதாடல், (௧௪) தலையிலே சீலைதரித்துக்கொள்ளல், (௧௫) தோளிலே சீலைபோட்டுக்கொள்ளுதல், (௧௬) போர்த்துக்கொள்ளுதல், (௧௭) சட்டையிட்டுக்கொள்ளுதல், (௧௮) பாதரட்சையிட்டுக்கொள்ளுதல், (௧௯) விக்கிரகத்தைத் தொடுதல், (௨௦) நிருமாலியத்தைக் கடத்தல், (௨௧) நிருமாலியத்தை மிதித்தல், (௨௨) கொடித்தம்பம், பலிபீடம், இடபதேவர், விக்கிரகமென்னும் இவைகளின் நிழலை மிதித்தல், (௨௩) வீண்வார்த்தைபேசுதல், (௨௪) சிரித்தல், (௨௫) சண்டையிடுதல், (௨௬) விளையாடுதல், (௨௭) சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கேபோதல், (௨௮) ஓடிவலம்வருதல், (௨௯) சுவாமிக்கும் பலிபீடத்துக்குமிடையே நமஸ்கரித்தல், (௩௦) முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் வணங்குதல், (௩௧) திருவிளக்கவியக் கண்டும் தூண்டாதொழிதல். (வரும்.)

சைவப்பஞ்சாங்க நவராத்திரி நிர்ணய மறுப்பு.

சைவானுஷ்டான சீலர்களே?

இவ்வருட நவராத்திரியாரம்பத்தைப் புரட்டாதி௴ 26-ந் திகதியும், மகாநவமியையும் விஜயதசமியையும் முறையே ஐப்பசி௴ 3-ம் 4-ம் திகதிகளில் கொள்ளவேண்டுமெனவும் இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் வெளியிடப்பெறும் திருக்கணிதம் வாக்கியம் என்னும் எல்லாப்பஞ்சாங்கங்களும் நிர்ணயஞ்செய்திருக்க, சிலவருடங்களாகத் திருநெல்வேலித் தென் இந்தியசைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தால் சிலநோக்கங்களோடு வெளிப்பட்டு வருகின்ற சைவவாக்கியபஞ்சாங்கம் நவராத்திரியை ஆவணி௴ 27உ சனிக்கிழமை தொடக்கம் புரட்டாதி௴ 5-உ வரைக்கும் அனுஷ்டிக்க வேண்டுமெனக் கூறுகின்றது.

இவர்கள் ஸௌரமானமே எல்லாவற்றிற்கும் கைக்கொள்ளப்படுவதென்றும், சாந்திரமானம் ஸ்மார்த்தப்பார்ப்பனரால் கைக்கொள்ளப்படுவதென்றும் புதிதாக ஒரு சித்தாந்தம் செய்திருக்கிறார்கள். அதுமாத்திரமன்றிச் சந்திரனையும் அதனாலேற்படும் சாந்திரமானத்தையும் இகழ்ந்து இந்துசாதனம் 17-ம் இலக்கப்பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள். இவர்கள் கூறுவன விநோதமும் விபரீதமுமாக விருக்கின்றன.

சூரியமண்டல உற்பத்தியை வானசாஸ்திர முறையிற் கூறுமிவர்கள் சந்திரன் வளர்வதும் தேய்வதுமென்று கூறுவதும் பெரும் வியப்பே. சூரியனிலிருந்து பிரிந்த கிரகங்கள் எப்படி நாளடைவில் ஒளி இழந்தனவோ! அப்படியே சூரியனும் ஒளியிழந்துகொண்டு வருவதும், அவ்வாறு ஒளியிழந்து தடிப்பதினாலே நவரும் சக்தி கூடுகிறதென்பதும் அறியாதகாரணம்யாதோ? சந்திரன் சூரியனிலும்பார்க்கச் சமீபத்திலிருத்தல் காரணமாகப் பூமியைச் சூரியனிலும்பார்க்க இரண்டரைமடங்கு பலத்துடன் ஆகர்ஷிக்கின்றதென்பதை மறந்தமையாதுகாரணமோ? திரைப்பெருக்கில் சந்திரனின் கவர்ச்சியை அறியலாமே. ஸௌரமானம் பூமிசூரியனைச் சுற்றி வருகிறதால் உண்டாகின்ற பொய்த்தோற்றமன்றோ? சாந்திரமானமோ, அப்படியல்லாது சந்திரன் பூமியைச்சுற்றிவருதலால் உண்மையிலேற்படுகின்ற கால அளவன்றோ? மேலும் ஜாதகத்திற்குச் சந்திரலக்னமன்றோ விசேடமுடையது. சந்திரனை நீக்கினால் இவர்கள் பஞ்சாங்கம் கணிப்பதெவ்வாறோ? இந்தியருக்கே விசேடமாகிய நட்சத்திரப் பிரிவுகள் சந்திரன் கதியாலன்றி சூரியன் கதியாலானதோ? திதியென்பது சூரியகதி நீங்கிய சந்திரகதியன்றோ. இனிச்சூரியனைக்கொண்டே இவற்றையெல்லாம் நிருவகிப்பார்போலும். ஆனால் ரவிநின்ற நட்சத்திரம் சுபகருமங்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறதே. என்செயலாம்! ரவியும் ஒரேவிதமான கதியில் செல்வதில்லையே. சவுரமானமும் சாயனம் நிரயனம் எனப்பேதப்படுகின்றதே. மற்ற, சந்திரன் பிரத்தியதிதேவதை தேவி யென்பதும் சந்திரகதியில்லாதவர்கள் தேவியைப் பூசிப்பதும் தேவிக்கும் சந்திரனுக்கு முள்ள தொடர்பை விளக்குகின்றதன்றோ. சாந்திரமானத்தையே தனித்து வணங்கும் சமயத்தினரும் உண்டல்லவா? நவராத்திரியென்பது ஒன்பது இரவன்றோ? அவ்விராக்காலத்துக்குத் தலைவன் சந்திரனன்றிச் சூரியனோ? இக்காரணங்களால் சாந்திரமானமும் விசேஷமானதென்பதும் நவராத்திரிக்குச் சாந்திரமானம் பொருத்தமானதென்பதும் பெறப்படுகின்றதன்றோ?

திருவிழாக்காலங்களில் சிலவற்றிற்குத் திதியும் சிலவற்றிற்கு நட்சத்திரமும் சடங்குகளுக்குள்ளும் சிலவற்றிற்குமேடாதிமாசங்களும் சிலவற்றிற்குச் சைத்திராதி சாந்திரமாசங்களும் விதித்த முதியோர் முற்றமுணராதவர்களா? இவர்கள் தம் பஞ்சாங்கம் சித்திரை, வைகாசி முதலிய மாதப்பெயர்களைத்தாங்கி வருதல் சௌரமானக்கொள்கைக்கு மாறானதென்று கருதி "சௌரமானப் பெயர்கள் சைத்திரம் வைசாகம் முதலியன; சித்திரை வைகாசி முதலியன சௌரமானப்பெயர்களின் திரிபுகள்" என்று கூறத்துணிந்ததும் விந்தையே! ரவி மேடத்திற்கு வருவதற்கும் சித்திரைக்கும் யாது சம்பந்தம்? இது குலாலகாதருக்கும் கோகுலாஷ்டமிக்குமுள்ள சம்பந்தம்போலும்! இவ்வாறு சாந்திரமாதப் பெயர்களைச் சௌரமாதப்பெயர்களென எழுதிவிட்டுச் சாந்திரமாதங்களையும் அப்பெயரால் தம்பஞ்சாங்கத்தில் குறித்திருக்கிறார்கள். இவர்கள் யுக்திதான் என்னையோ!

இந்திய வானசாஸ்திர கணிதநூல்கள சூரியசித்தாந்தம் முதலிய சோதிடநூல படியல்லவா பஞ்சாங்ககணிதம் செய்யப கிறது. சித்தாந்தங்களுள் முதன்மையான சூரியசித்தாந்தத்தின் "அபிஷேகதா நட்சத்திரம்..............." என்று தொடங்கிய சுலோகங்களையும்,

> "சௌரேணத்யு நிசோர்மானம் ஷடசீதிமுகாநிச, திதிக்காண முத்வாஹச் செஷளரம் சர்வத்ரியாம்ததா, வர்ஷோதாபவா ஸபாத்திரணும் (உபசவங்கள்) க்ரியாசாந்த்ரேண ஸாஸ்யதே."

> "நக்ஷத்ர நாம் நாமா ஸாந்த ஞெபாப்பர்வாந்தயோகத:!"

என்ற மேற்படி சித்தாந்த சுலோகத்தையும்,

> "வர்ஷாய நர்த்தயுக பூர்வகமத்ரசௌராத் மாசாந்ததாசதிதி, யஸ்துசிளும் சுமநாத",

என்ற சித்தாந்த சிரோமணி வசனத்தையும் [illegible] சாந்திர மாதத்தையே விசேஷமாக விரதம், உபவாசம், உற்சவம் முதலியவற்றில் கைக்கொள்ளவேண்டுமென நன்கு தெரிகின்றதே. இதற்குமாறாக நிர்ணயஞ் செய்பவர்கள் அவற்றின் வழிவந்த கணிதத்தையும் மாற்றியமைக்கப் பின்னில்லார்கள் போலும்! ஜோதிஷ சம்பந்தமான விஷயங்களை அந்நூல்களில் கண்டு தெளிதலன்றோ முறையாகும்.

காரணம் முதலிய ஆகமங்கட்கும் ஸ்மிருதி புராணங்கட்கும் ஆஸ்வின சுத்தத்தில் கொள்ளவேண்டுமென்பதே கருத்தாகும். பூர்வகாரணாகமம் நவராத்திரி விதிப்படலம்,

> "அதாதஸ்சம் பிரவக்ஷ்யாமி நவராத்திரி விதிக்கிரமம், ஆஸ்வயுக் சுக்லபக்ஷேது பிரதிபத நவம்யந்தகே, பிரதிபத்தினமாரப்ய வ்ரதோத்ஸவம் சமாசரேத்"

என்பதில், "ஆஸ்வயுக் சுக்லபக்ஷேது பிரதிபந் நவம்யந்தகே" என்பதனால் சாந்திரமான ஆசுவீசப் பிரதமை தொடக்கம் நவராத்திரி கொள்ளவேண்டுமென இருக்கிறது. இது தமக்குமாறாக இருந்தமை கண்டு "இதில் ஆஸ்வயுக் என்பது சாந்திரமான ஐப்பசியாம்.........இதனால் இதைச் சௌரமான ஐப்பசி யென்றாவது சாந்திரமான ஐப்பசி என்றாவது மயங்கி விடுதல் கூடாது" என்று முன்னொடு பின் முரணக் கூறியும் சாந்திரப்போக இங்கே கூறப்பெற்ற ஆஸ்வயுக் சௌரமானப் புரட்டாசியையே யுணர்த்துமெனப் புது வியாக்யானம் செய்யத்துணிந்ததும் இவர்கள் போலி நிர்ணயத்தை வெளிப்படுத்துகின்றதே!

"கன்னியாவித பிரதமாமாரப்யநவம்யந்தம் உமாவிரதம்" என்ற காமிகாகமவசனம் கன்னி மாசத்தில் வருகின்ற சுக்லபக்ஷப்பிரதமையில் நவராத்திரி விரதத்தைத் தொடங்கவேண்டுமென்றிருக்க சிங்கமாச சுக்லபக்ஷப்பிரதமையில கொண்டதற்குப் பிரமாணம் யாதோ! ஓராகமத்திலுமிவர்கள் நிர்ணயத்திற்கு விதி காணப்படவில்லையே!

காமிகாகமம் துர்க்காவிதிப்பூஜா படலத்திலேயே

> "ஆஸ்வயுக் சுக்லபக்ஷா அஷ்டமீமூல சம்யுதா, சா மகாநவமீ நாம த்ரைலோக்கியே 'அதிசுதுர்லபா'"

என்பதில் ஆஸ்வினத்தில் வருவதே மஹாநவமி யென்று தோன்றுகிறது. மூலநட்சத்திரத்தோடு கூடியவரின் மூன்று லோகங்களிலும் மிகவும் பெறுதற்கரியதெனவே மூலத்தோடுகூடி வரா திருத்தலுமுண்டென்பது பெறப்படும்.

காமிகாகமம் நவராத்திரி விதி கூறுமிடத்தில் "சௌரமானேநகர்த்தவ்யா நவராத்திரர் விசேஷத:, சாந்திரமானேநகர்த்தவ்யா இருஞ்சேதுராஷ்டிர நாசனம்" என்றுமிவர்கள் காட்டும், சுலோகமிவர்களது நிர்ணயத்திற்கு மாறாக இருக்கின்றதே, சௌரமாதங்களும் அவற்றிற்குச் சமமாக வழங்கப்படுகிற சாந்திரமாதங்களுமுண்டு கன்னிமாசத்திற்கு சாந்திரமாதமாகிய பாத்ரபதமே வழங்கப்படுகிறது. இவர்களோ பாத்ரபத சுத்தத்தில நிர்ணயஞ் செய்திருக்கிறார்கள். ஆகவே சாந்திரமானப்படி இவர்கள் கொண்டு தாம காட்டிய தோஷத்திற்கு ஆளாகின்றனரோ. கன்னிமாதத்தில வரும ஆஸ்வீசசுத்தமே நவராத்திரி ஆரம்பத்திற்கு கூறப்பட்டது.

மேலும் ஸ்காந்தத்தில் "மார்த்தாண்டஸ்ய உதயே புண்ணியாவர்த்தநே தசமீதிநே ஆஸ்வினேசுக்லபக்ஷே து சாபவேத்ஜயதாதிநே" என்று கூறப்பட்டிருப்பதனால் சாந்திரமான ஆஸ்வினத்தில் விஜயதசமி கொள்ளவேண்டுமெனவும பெறப்படுகிறது.

சித்தாந்த சாராவளி, பவித்ரோத்சவத்திற்கு குறித்த "அர்க்கேயுக்மகதே" என்னுமி

---

*பிரதட்சிணம் - சுற்றிக் கும்பிடுதல் சரீரம் முழுவதும் நிலத்திலே பொருந்தச் சுற்றுதல் அங்கப்பிரதட்சிணம் என்று சொல்லப்படும்.

சலோகத்தில் சுக்லபக்ஷ சதுர்த்தசியைக் கொள்கையில் ஆஷாடத்தை யடைந்த மிதுனராசி சௌரத்தோ ஊர்த்தவ மிதுனமென்றும் ஜ்யேஷ்டமாதத்தை யடைந்த மிதுனராசி சாந்திரதவே அதோ மிதுனமென்றும் வியவஸ்தை செய்து ஊர்த்தவ மிதுனத்தையே கொள்வதுபோல காமிகாகமத்தில் சொல்லப்பட்ட "கன்னியாகதே" என்ற சலோகத்தில் கன்னி மாச சுக்ல அட்டமி என்பது கன்னி மாசத்தை யடைந்த ஆஸ்வீச சுக்ல அட்டமியையே கொள்ள வேண்டுமன்றி அதோ கன்னியாகிய பாத்திர பதத்தைக் கொள்ளக்கூடாது. மேலும் சிங்க மாதத்திலும் பாத்ரபதத்திலும் நவராத்திரி தொடங்கி முடிக்கப் பிரமாணமின்மை காண்க. விரிக்கிற் பெருகும்.

சைவர்கள் யாவருக்கும் சௌரசாந்திரமானங்கள் விசேஷமுடையனவே. விரதம், விவாகம், ற்சவம் முதலியவற்றில் சிலவற்றிற்கு சௌர னமும், சிலவற்றிற்குச் சாந்திரமானமும் ள்ளவேண்டுமென ஸ்மிருதிகள், ஆகமங்கள், புராணங்கள், ஜோதிஷசாஸ்திரங்கள் விதிக்கின்றன. அவற்றின்படி ஒழுகலே சைவ சமயிகளின் கடமையாகும்.

22-9-31, சி. சுப்பிரமணிய ஐயர்.
தில்லைவாசம்,
மட்டுவில், சாவகச்சேரி.

மாசிக சிராத்த பிண்டத்தை இறந்த ஆன்மா உண்ணும் விதம்.

உடலைவிட்டு நீங்கிய ஆன்மா சிறிது தூரம் வாயுமார்க்கத்திலும் சிறிது தூரம் பூமி வழியாகவும் யமதூதர்களோடு சென்று ஓரிடத்திற் றங்கி இருபத்தெட்டாம் நாளில் ஊனமாசிக சிராத்த பிண்டத்தை உண்டு முப்பதாநாள் யாமியமென்ற நகரம் சேர்ந்துசேருவன் அங்கே பிரேதக் கூட்டங்கள் மிகுதியாயிருக்கின்ற புண்ணியபத்திரையை யென்றநதியும் ஒரு ஆலமரமுமுண்டு. சிறிது சிரமபரிகாரத்தின் பொருட்டு சிங்காது உத்தரவால் இரண்டாம் மாசிக பிண்டத்தைப் புசித்து, இரவிலும் பகலிலும் தூதர்களாலே இழுக்கப்பட்டு அச்சந்தருவதாகிய காட்டினூடு சென்று வழிநடக்கும் வருத்தத்தால் துன்பமுற்றுப் போதும் வழியில் (40) நாளுக்குமேல் (45) நாட்களுள் செய்வதாகிய திரைபக்ஷிக மாசிக பிண்டத்தைப் புசித்து, சௌரியென்ற நகரஞ் சார்ந்து அந்நகரத்தில் மூன்றும் மாசிக பிண்டத்தையுண்டு, அதன்மேல் கந்தருவ நகரத்தை யடைந்து அங்கே நான்காம் மாசிக பிண்டத்தையுண்டு, அப்பால் வழியிலே சகிக்கக் கூடாத குளிரினால் அதிகம் வருந்துவன் யமதூதர்கள் அநேகர் கூடி மேகம் போலக் கற்களைப் பெய்வர் அக்கல் மழையினால் வருந்தழுந்து குரூபுரம் என்னும் நகரத்தை யடைந்து அங்கே ஐந்தாம் மாசிக பிண்டத்தைப் புசித்து, அப்பால் நடந்து கிரவுஞ்சமென்னும் நகரத்தையடைந்து அங்கே ஆறும் மாசிக பிண்டத்தைப் புசித்து, அங்கே அரைமுகூர்த்த காலமிருந்து சிறிது சிரம பரிகாரமடைந்து பின் எல்லோரும் அஞ்சத் தக்கவழியில் செல்லுவன் செல்லும் போது முன்னே தாமிருந்த நிலபாங்களை நினைந்து அழுவன். அப்போ யமபடர் கோபித்து அந்தவழியில் அடிப்பர் அடித்தது வைதரணி நதியைக் கடந்து விசித்திர மென்றும் நகரத்தை யடைந்து (170) நாளுக்குமேல் (180) நாட்களுள் செய்யும் ஊனஷாண்மாசிக பிண்டத்தையுண்டு சென்று, ஏழாம் மாசிக பிண்டத்தை யுண்ணுந் தருணம் சில பசாசுகள் வந்து ஏ சீவனே நீ பூமியில் வாழ்ந்திருந்த போது யாசித்தவர்களுக்கு ஒன்றுமில்லை யெனத் தாத்தினுயே இப்போ பிண்டத்தைக் கோடு வென்று வலோத்காரமாய்ப் பிடுங்கிக் கொள்ளும் அப்போ தனது கையிற் சிதறிய பிண்டசேஷத்தையுண்டு சிறிதுவிடாய் தீர்ந்து ஏழாம்மாசத்தில் அப்பால் நடப்பான் பக்வாபதம் பட்டணத்தை யடைந்து எட்டாம் மாசிக பிண்டத்தையுண்டு, அதனின் நின்றும் நடந்து துக்கதல்என்னும் நகரணைந்து பெரிய துன்பத்தை யனுபவித்து ஒன்பதாம் மாசிக பிண்டத்தையுண்டு, அதனை நீங்கி நாநாக்கிரந்த மென்னும் நகரத்தையடைந்து பத்தாம் மாசிக பிண்டத்தை யுண்டு, அப்பால் சுதப்தமென்னும் நகரத்தை யடைந்து பதினொன்றும் மாசிக பிண்டத்தை யுண்டு, அதன்மேல் சீதாப்ரம் என்னும் நகரத்தை யணைந்து அங்கே குளிரினால் வருந்திப் பன்னிரண்டாம் மாசிக பிண்டத்தையுண்டு, அதனை விடுநீங்கி, யமதூதுவர்களது வேதனையால் மனந் தத்தளித்து வைவசுவதபட்டினம் போய்ச்சேருந்து முன்னரே (340) நாளுக்குமேல் (355) நாட்களுள் செய்யப்படும் ஊனாப்திக பிண்டத்தைப் புசித்து அத்தப் பட்டினத்தைச் சேருவான்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
அம்மன்கோயில்,
சுதுமலை.

விளம்பரம்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்.

இச்சங்கத்தின் பதின்மூன்றவது வருடாந்தக் கூட்டம் வருகிற ஐப்பசி௴ 12௳ திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிவரையில் ஷெ சங்க "மகா மண்டபத்தில்" நடைபெறும், அந்தருணம் 1931-ம் ஆனி௴ 30௳ முடியவுள்ள வருஷாந்தக் கணக்கும், நிருவாக கர்த்தர்களின் அறிக்கைப்பத்திரமும் அங்கீகரிக்கப்படும்.

வ. மு. வியாகேசன்,
காரியதரிசி.

(Mis. 272 21-, 24-, 28)

கேட்பாரில்லையா?

சென்ற சில வருடங்களாகத் தேநீர் 1பேணி 3சதமாகவும், கோப்பிநீர் 4 சதமாகவுங் கடைகளில் விற்கப்பட்டு வந்தது. இப்போ சில மாசங்களாக; கோப்பி தேயிலை சீனி முதலாம் பொருட்களின் விலை அரைக்கரைவாசி வீதம் குறைந்தமையாலும், பத்திரிகைகள், துண்டுப் பத்திரிகைகள் மூலமாகக் கிளர்ச்சி செய்தமையாலும் வியாபாரிமார் ஒருவாறு அரைமனதோடு விலையைக் குறைத்துத் தேநீர் 1 பேணி 2 சதமாகவும் கோப்பிநீர் 1 பேணி 3 சதமாகவும் விற்கத் தொடங்கினர். பலகார வகைக்குரிய பச்சரிசி, தேங்காய், பயறு, உழுந்து, தேங்காய்நெய், முதலாம் பொருட்களும் மலிவுற்றமையால் பலகார வகைகளும் சிறிது அளவு பெரிதாகக் காணப்பட்டன. மேற்படி பொருட்கள் விலை குறைவாகத் தொடங்கிய காலந்தொட்டு இன்றுவரை ஏறக்குறைய ஒரே விலையினவாகவே யிருந்து வருகின்றன. அப்படியிருந்தும் தற்போது சிலர் தேநீர் கோப்பிநீர் முதலியவைகளைப் பழைய கால விலையான 3சதம் 4சதத்திற்கு விற்கத் தொடங்கிவிட்டனர். பலகாரங்களும் பழைய காலவிலையிலும் இப்போது கூடிவிட்டதாக்குமென எண்ணக்கூடிய அளவில் வந்துவிட்டன.

லெமினட் சோடா முதலிய வற்றையும் சிறிதுகாலம் 8சதமாக விற்று வந்தார்கள். இப்போ சில கடைகளொழிந்த ஏனைய கடைகளில் பழைய விலையாகிய 10 சதத்திற்கு விற்கத் தொடங்கிவிட்டார்கள். இவைமாத்திரமா? பலசரக்கு வியாபாரிமாரிற் பலர் செய்யும் திருவிளையாடல்கள் சொல்லிலடங்கா. பொருட்களின் விலை திடீரென உயர்ந்துவிடுமாயின் அந்நேரமே உயர்த்திவிற்கத் தொடங்கிவிடுகிறார்கள் விலை குறைந்துவிடினோ மற்றையோர் அறிந்து வாங்கச் சம்மதியாது மறுக்கும் வரைக்கும் குறைத்து வில்லாது மௌனஞ் சாதித்து விடுவார்கள். நிறுப்பனவும் அளப்பனவுமான பொருட்களோ கேட்ட கேட்ட விலைகளெல்லாம் கொடுபடும். காரணம் யாது? அளவையும் நிறுவையுந்தான்.

என் நெய் (நல்லெண்ணெய்) வியாபாரிகளிற் சிலர் ஏதோ கலவையை என்நெய்யுடன் கலந்து விலையை மிகவுங் குறைத்து வீடு வீடாய்க் கொண்டு சென்று விற்று விடுகிறார்கள். சூழ்ச்சியறியாதோர் அந்த எண்ணெயை வாங்கி வைத்துவிட்டுச் சில நாட் கழித்துப் பார்க்க அது வெளியிலே ஊற்றவேண்டிய நிலையிலிருப்பதைக் கண்டு திகைப்படைகின்றார்கள். பாமர மக்கள் வேறு யாதுதான் செய்யக் கூடும்? தங்கள் முறையீட்டைக் கடவுளுக்கு அனுப்ப வேண்டியதுதான். மண்ணெண்ணெய் விற்போரும் பழையவிலையாகிய போத்தல் ஒன்று 20 சத விலைக்கே விற்கின்றார்கள். இப்போ ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 17 சதமாகச் சில விடங்களில் விலைப்படுகின்றது. கேட்பினோ, பிடித்தால் வாங்கு, இல்லாவிட்டால் போ என்ற பேச்சே கிடைக்கிறது. என்ன விலையென்றாலும் வாங்க வேண்டியது தான்.

இப்படியே வியாபார மென்பது களவு தொழிலுக்குச் சமானமெனச் சொல்லக்கூடிய விதத்தில் வியாபாரிமார் நடத்துகொள்ளுகிறார்கள். அரசினர் யாது செய்வர்? அளக்கும் கொத்து, பறை, கலன் முதலியவற்றையும், நிறுக்கும் தராசு படிக்கல்லு முதலியவற்றையும் சரியான அளவையோ எனப் பரீட்சித்துச் சரி எனக் கண்டவைகளுக்குத் தமது அடையாளத்தையும் பொறித்துவிடுகின்றனர். தமது அடையாளமில்லா அளவு பொருட்கள் கடையில் உபயோகிக்கப்படின் தண்டத்திற்கும் ஆளாகுகின்றார்கள். சரியான அளவைக் கொண்டே பிழையாக அளக்கும் வியாபாரிமாரின பிழைக்கு யாது செய்யக்கூடும்?

வியாபாரிமாரின் பேராசை எப்போது அவர்களை விட்டகலுமோ அப்போதே இக்குறைகள் நீங்கும். வாங்கிய விலையிலும் சிறிது லாபம் வைத்து ஏமாற்றாது விற்கவேண்டியதே வியாபார ஒழுங்காகும். விலையைக் குறைத்துக் கொடுக்கவேண்டுமெனச் சொலவில்லை. அளவைக் குறைப்பது பெரிய ஏமாற்றாகும். இதினால காலகடையில் வியாபார மதிப்புக் கெட்டுவிடும்! ஆதலால், வியாபாரிகளாகிய சகோதரர்களே, நியாயமாக நடந்து வியாபாரத்தின் பெருமையை வெளிக் காட்டுங்கள்! பெருமையைப் பெறுங்கள்!

உண்மைவிளம்பி,
—சுதேசாட்டியம். வயாவிளான்.

புலாலுண்ணல்.

(முற்றொடர்.)

“எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவி தான் யாதினும் அரிது அரிது காண், இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ, ஏது வருமோ அறிகிலேன்.” என தாயுமானசுவாமிகளும் “எண்ணரும் காயத்தின் பின்னரிக் காய மினிதளித்தாய்” எனத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளியவாறு பல இழிந்த சரீரங்களையெடுத்தபிறகே கடைசியில் ஜீவன் இவ்வுயரிய மானிடப்பிறவியை அடைகிறான். ஆகையால் பகுத்தறிவையும், புண்ணிய மேலீட்டினால் கிடைத்தற்கரிய மானுடயாக்கையையும் பெற்ற நாங்கள் எங்கள் கீழ்ப்பிறவிகளாகிய ஏழைப் பிராணிகளை எங்கள் சகோதரராகப் பாவியாது சிறிதும் பகுத்தறிவற்று அவைகளைக் கொன்று ஊனைத்தின்று பாவமூட்டையைக் கட்டலாமா? ஆடு கோழி முதலிய பிராணிகளுடையமிருகபாஷையை எமக்கு விளங்கிக்கொள்ளச் சக்தியிருந்தால், அவற்றைக் கொல்வதற்கும் உண்பதற்கும் மனம் தான் வருமா? அந்தோ அநீதம்! பெரும்பாவம்!! யான் கூறியதைத் தயவாக ஊன்றி யோசித்துணர்ந்து பாருங்கள். அன்றியும் எங்கள் யாக்கை நீரிற் குமிழிபோல் சீக்கிரத்தில் அழியுந்தன்மையது. இதுபற்றியே “நெருநலுளனொருவனின்றில்லை யென்னும் பெருமையுடைத்திவ்வுலகு” என நாயனாரும் கூறியிருக்கின்றனர். அதாவது நேற்றிருந்தவன் இன்றில்லை என்னும் பெருமைதான் இவ்வுலகுக்குண்டென்பதாம். “இன்னும் புன்னுனிமேனீர்போனிலையாமை யென்றெண்ணி யின்னினியே செய்க அறவினை—இன்னினியே நின்றானிருந்தான் கிடந்தான் றன்கேளலறச் சென்றானெனப்படுதலால்;” என நாலடியாரிலும் கூறப்பட்டிருக்கிறது. எடுத்த சரீரம் கணப்பொழுதிலே அழியுமியல்பினதாதலால், அதற்கிடையே தருமத்தை விரைந்து செய்கவென்பதே இதன் கருத்து. தருமத்துள் மிகச் சிறந்த தருமம் கொல்லாமையும், புலாலுண்ணமையுமே இவைகளொன்றையும் சிறிதேனும் சிந்தித்துப் பாராது பகுத்தறிவற்ற வனவிலங்குகட்கொப்பாய் நாம் தவறானவழியில் நடக்கலாமா? சீச்சீ! வெட்கம்! வெட்கம்!! எனதன்புடைய சகோதர சகோதரிகாள்! இதனிமித்தம் உங்கள் பகுத்தறிவைச் சிறிதுபயோகித்துணர்ந்து பாருங்கள். இதுநிற்க புலாலுண்பதினுல் மிகுந்த பெலமுண்டாகுமென்று சிலர் கூறுவர், புலால் உண்பதினுல், ஒருகாலத்தும் பெலன் வருவதில்லை முதலாவது மாமிசபோசனம் மனித சரீரத்தின் அமைப்புக்குப் பொருந்தாது புலி, சிங்கம் முதலிய மிருகங்களுக்கே மாமிசத்தை புண்ணத்தக்க பற்களும் குடல்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மனித சரீரத்தின் அமைப்புக்கு மாமிசத் தின்னத்தக்க பற்களேனும், குடல்களேனுமில்லை. பிராணிகளைக் கொலை செய்வதும், அவற்றின் புலாலை உண்பதும் ஜீவகாருண்யத்திற்கும் மக்கள் உடல் நலத்திற்கும் விரோதமானதென்று மேல்நாட்டார் கண்டுபிடித்து அதனை நீக்கி வருகின்றார்கள். மாமிசம் வியாதியை உண்டாக்குமென பல வைத்தியர்களும் கூறுகிறார்கள். தாவரபோசனஞ் சாப்பிடுகிறவர்கள் களையாமல் நெடுநேரத்திற்கு வேலைசெய்யக் கூடியவர்களா யிருக்கிறார்கள். கொல்லப்பட்ட பிராணிகளுக்கு எளிதில் புலப்படா வியாதிகள் இருந்திருக்கலாம். அவற்றின் புலாலை மக்கள் உண்ணுவதால் உண்பவர்கட்கும் அவ்வியாதிகள் வருவதற்கு இடமுண்டாகிறது. மாமிச உணவு இரக்கம், தயை, பக்தி, பொறுமை, அடக்கம் முதலான தூய குணங்களின் அபிவிருத்திக்கு இடையூறு செய்யுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் விளங்கும் உணவுக்கு ஏற்றதாகக் குணங்களும் பொருந்துகின்றன ஆகவே சில விலங்குகளின் மாமிசத்தை உட்கொள்ளுவதால், அவற்றின் குணத்தன்மையை ஒரு சிறிதாவது மனிதர்கள் அடைதல் கூடும். உதாரணமாக புலியும் பசுவும் மிருகவினத்தைச் சேர்ந்தன. இவ்வாறிருக்கவும் புலி மாமிசத்தின்பதினுல், உக்கிர கோபமும் பசு தாவர பொருட்களை யுண்பதினுல், சாந்தகுணமு முடையனவாயிருப்பதை நாம் பிரத்தியட்சமாகக் காண்கின்றோம். தேகாரோக்கியம் சம்பந்தமாகவும், குணநிசயம் சம்பந்தமாகவும், புலாலுண்பவர்கட்கு இன்னுமனேக கெடுதிகள் சம்பவிக்கக் கூடும். நாம் இப்போது முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம், புலால் உண்ணுதல் ஆன்மவிருத்திக்கு முற்றிலும் விரோத மென்பதேயாம். இவ்வுண்மை உணரப்பெறாத, இக்காலத்து ஆங்கில வைத்தியர் பலர் நோயாளிகளையும், மாமிசம் புசிக்குமாறு ஏவுகிறார்கள். சுயநல நோக்கத்துடன் கவனிக்கும்போது, மனிதர்கட்கு மாமிசஉணவால் பிரசன்மையே தவிரக் கெடுதி ஒன்றுமில்லையென்று வைத்துக் கொள்ளுவோம். அப்படியானலும், மனிதர்கள் புலாலுண்ணுதல் சரியென்று கொள்ளலாமா? அதற்காகக் கொல்லப்படும் பிராணிகளின் சுகதுக்க வாயிலாக மனிதர்கள் அவ்விஷயத்தை ஊன்றிக் கவனிக்க வேண்டிய தில்லையா? செடி, கொடிகள், மரங்கள், முதலியவை சாதாரணமாய் நாம் உயிருள்ளவையென்று சொல்லுகிற பிராணிகளாகவும், பின்னர் அப்பிராணிகள் படிப்படியாய் மேனிலையடைந்து மானிட ஜன்மத்தை யடைகின்றன வென்பது சைவசமய சாஸ்திரங்களின் வாயிலாக நாம் அறிகின்றோம். ஆதலின் குறுக்கே மனிதர்கள் தின்று அவைகளைக் கொன்று தங்களுடைய ஊனை வளர்க்க முயற்சித்தல் கடவுள் சட்டத்திற்குப் பொருந்தியதாகுமா? இறந்தபின் என்ன ஜன்மம் கிடைக்குமோ என்று யோசிக்கிறார்களில்லையே! ஐயோ! இதை நினைக்கும் பொழுது என் மனம் பதறுகிறதே! நாம் அநுபவிக்கப் பட்டனவும், இப்போ அநுபவிக்கப் படுகின்றனவும், இனி அநுபவிக்க வேண்டியனவுமாகிய துன்பங்கட் கெல்லாம் முற்பவத்திலாக்கிய வினைகளே காரணமாகும். இம்மையி லியற்றுவன யாவும், மறுமையின் மூட்டைகள். இம்மையில் யாம் துய்ப்பனவற்றால் நடந்த பிறவியின் காரியங்களையும், மறு ஜன்மாவில் அடையவேண்டிய பலனை இம்மைச் செயல்களாலு முணரலா மென்பது ஆன்றோர் கொள்கை. “இறந்த பிறப்பிற் றான் செய்த வினையைப் பிறந்த பிறப்பா லறிக — பிறந்திருந்து செய்யும் வினையா லறிக இனிப் பிறந் தெய்தும் வினையின் பயன்,” என வரும் நீதிச்செய்யுளால் யாவர்க்கும் இது இலகுவாய் அறியக் கிடக்கின்றது இன்னும் “மேலைக்கு வித்துமாகி விளைந்தவை யுணவுமாகி, ஞாலத்து வருமாபோல நாம் செய்த வினைக ளெல்லாம், மேலைத்தான் பலமாச் செய்யும் மிதமிதங்கட்கெல்லா, மூலத்தாகி மண்மேல் வந்திடு முறைமையாலே’ என்பதாலு மறியலாம் நன்மையோ தீமையோ முற்பகுதியில் செய்தால் பிற்பகுதியில் அநுபவித்தே தீரவேண்டும். ஒழிக்கு முபாயமுண்டோ வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம் எனைத்தாய நூலகத்துமில்லை; “அக்கேபோலங்கை யொழிய விரலழுகித் துக்கத்தொடு நோயெழுபவே — யக்கா லவனை காதலித்துக் கான் முரித்துத் தின்ற பழவினை வந்தடைந்தக்கால்” அதாவது முற்பிறப்பில் நண்டு முதலிய பிராணிகளை விரும்பி, முறித்துத் தின்றதனுலாகிய, பழைய தீவினை (பிற்பிறப்பில்) வந்து சேர்ந்தால் அத்தீவினை செய்தவர்—சங்குபணிபோல, அகங்கை மாத்திரம் நீக்க, விரல்கள் அழுகிப்போய், மிக்க துன்பத்திற்கு இடமான குஷ்டவியாதி உண்டாகப் பெறுவர் என்பதே இதன் கருத்து இச் செய்யுள் யான் மேற்கூறியவைகளை வற்புறுத்துகிறது எனதருமைச் சகோதர சகோதரிகளே! உங்களுக்குச் சீவகாருண்யமும் அருவருப்புமில்லாவிட்டாலும் மறு ஜென்மத்தைப்பற்றியும் அதில் அடையவேண்டிய தண்டனைகளைப் பற்றியுமாகுதல் உங்களுக்குப் பயங்கர முண்டாகவில்லையா? அந்தோ! இதை நினைக்கும் பொழுது எனக்கு மிகவும் ஆச்சரியமும் துக்கமுமாயிருக்கின்றது. “தன்னூண்பெருக்குதற்குத் தான் பிறிதூனுண்பான், எங்ஙன மாளுமருள்” என ஔவையாரும் கூறியிருக்கின்றனர். புலாலுண்ணாமையினுலே தங்கள் உடம்பு மெலிகின்றது என்று உண்ணப்புகும் மனிதர்கள், புலாலுண்டு தங்கள் தூல உடம்பைப் பருக்கச்செய்து நரகத்தில் நெடுங்காலம் துன்பம் அநுபவித்தல் நல்லதோ, புலாலுண்ணமல் தங்களுடம்பை வாட்டி நித்தியமாகிய முத்தியின்பத்தைப் பெற்று வாழுதல் நல்லதோ, இதனைச் சிந்திக்கக் கடவர்கள். இன்னும் “பொருளாட்சி போற்றாதார்க்கில்லை அருளாட்சி, யாங்கில்லை யூன்றின்பவர்க்கே” என வரும் ஔவைப்பிராட்டியாரின் திருவாக்கையும் உய்த்துணரக்கடவர் ஜீவகாருண்யம், பாவத்துக்கு அஞ்சுங்குணம் இவைகளின்றியவர்களும், தங்கள் பகுத்தறிவைச் சரியாக உபயோகிக்காதவர்களுமாகிய இக்காலத்து ஆங்கிலவைத்தியர் பலர் நோயாளிகளை மாமிசம் புசிக்குமாறு ஏவுகிறார்கள். நோயாளிகளும் அதை ஒப்புக்கொண்டு அதன்படி மாமிசத்தைப் புசிக்கிறார்கள் அவரவர் முற்பிறப்பிற் செய்த பாவத்தை அநுபவிக்கவே நோய்வருகிறது. அந்நோயோடு மாமிசம்புசிக்கும் பாவத்தையும் சேர்த்து பாவமூட்டையை இன்னும் பெரிதாகக் கட்டலாமா? மாமிசம் புசித்தலை நிறுத்தியிருப்பவர்களிலும் அநேகர் நோயின் பொருட்டு வைத்தியரின் ஏவலினிமித்தம் வேதாளம் மறுபடியும் முருக்கமரம் ஏறிக் கொண்டதுபோல் நோயினிமித்தம் தொடங்கி அதன்பின் நெடுகப்புசித்துவருகிறார்கள். சிலர் மாமிசம் புசித்தலினிமித்தம் மரணத்தினின்றும் விடுபடலாமென்றெண்ணி நோய்வருங் காலங்களில் புசித்துத் திரும்ப மாமிசம் புசிக்கத் தொடங்குபவர்களாயிருக்கிறார்கள். மாமிசம் புசித்துவந்த இடையில் நிறுத்திச் சைவ போசனிகளாயிருந்தவர்களாகிய சில பெண்மணிகள் தங்கள் பிரசவநோயினிமித்தம்,வைத்தியர் சிலரின் ஏவலின்படி கோழிக்குஞ்சு ஆட்டுத்தலை முதலியவைகளை அவித்துக் குடித்தும், கறியாக்கிப் புசித்தும், வருகிறார்கள் என யான் கேள்விப்பட்டேன் இவர்கள் சைவமும், சத்தமும், ஜீவகாருண்ணியமும், இருந்தபடியென்னே? இச்சைவத்தில் இவர்கட்கு யாது பலன் உளது? இவர்களைப்போல், இன்னும் அநேகர் இருக்கக்கூடும்! சீச்சீ! வெட்கம்!! வெட்கம்!! சகோதரிகளே உங்கள் பகுத்தறிவைக்கொண்டு உய்த்துணர்ந்து ஜீவகாருண்யம், பாவம், அருவருப்பு இவைகளுக்காக மனப்பூர்வமாக வெறுத்தப் புலாலுண்ணுதவிட்டீர்களா? அல்லது உங்கள் பகுத்தறிவைக் கொண்டு சரியாக உய்த்துணராது மனப்பூர்வமான வெறுப்பின்றி சைவபோசனிகளாயுள்ளவர்களின் புகழுரைக்காகக் கண்டபாவனையிற் கொண்டை முடித்தீர்களா? மனப்பூர்வமான வெறுப்புடன் விட்டிருக்கீர்களேயானால், திரும்ப எத்தனை வைத்தியர், தாய், தகப்பன், கணவன் சுற்றத்தார், சொல்லினும் அதன்படி செய்து திரும்பப் பாவமூட்டையைக் கட்ட உங்கள் மனம் ஒருக்காலும் திரும்பவேமாட்டாது. நமக்குத் தேகசுகமும், ஆயுட்பெலமும் பிரசன்மை தீமைகளும் ஊழின்படி கடவுளருளால் வருவன. இடையில் வருவனவல்ல. ‘பேறிழவின்பமொடு பிணி மூப்புச் சாக்காடு’’ என்னும் ஆறு முன்கருவுட்பட்டது. இவ்வாறும் கருவிலேயே அமைந்துள்ள அநித்தியமாகிய, இச்சரீரத்தை மாமிசாதிகளைத்தின்று காப்பாற்ற நினைத்தல், நீர்க்குமிழிக்கு இருப்புப் பூண்கட்ட நினைத்ததை ஒக்கும் இதனை ஒவ்வொருவரும் தங்கள் பகுத்தறிவைக்கொண்டு சற்றேனும் யோசித்துணராது கோழிக்குஞ்சு முதலியவைகளை அவித்துக்குடிப்பதாலும், கறியாக்கி உண்ணுவதாலும், மரணத்திலிருந்து விடுபடலாமென்றெண்ணி இவ்வநியாயமான கொடும் பாதகச்செயலை மாமிசம் புசிப்பவர்கட்கும் நற்புத்திபோதித்து அவர்கள் மனதையும், திருப்புவதற்குக் கூடியவரையிற் றெண்டிக்க வேண்டியவர்களாகிய மாமிசம்விட்டுச் சைவ போசனிகளாயிருந்தவர்களுங்கூட, சிலஆங்கில வைத்தியரின் ஏவலை ஒப்புக்கொண்டு திரும்ப மாமிசம் புசித்தால், மாமிசபோசனிகள் எங்ஙனம் திருந்த முறுவது? ஆங்கில வைத்தியருடன் மாமிசபோசனிகளாயுள்ள சில கணவன்மாரும் இதற்குக் காரணராய் இருக்கின்றனரென யான் பலமுறையும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் தாங்கள் சுமக்கிற பாவமூட்டைபோதாதென்று மற்றவர்களை மாமிசம் புசிப்பிக்கும் பாவத்தையும் சேர்த்து பாவமூட்டையை இன்னும் பெரிதாக்குகிறார்கள் இப்படியான பிதா மாதாக்கள் சகோதரருமுண்டு. அவர்கள் சொல்லியென்! இவர்கள் சொல்லியென்!! கேட்பவர்களுக்குப் பகுத்தறிவில்லையா?

இங்ஙனம்,
கைலாசம்.-தங்கம்மாள்,
இராமநாத வித்யாலயப் பழைய மாணவி,
சிவியாதெரு-கிழக்கு.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

லண்டன் 21-9-31.

பவுணின் ஸ்திர நியமனவிலை நிர்மாணத்தை அரசாட்சியார் மீட்டுக்கொள்ளும் சட்டம் இன்று மூன்றாமுறையும் பொதுசன சபையில் வாசிக்கப்பெற்று அங்கீகாரம்பெற்று பட்டவர்த்தனர் சபையிலும் அங்கீகாரம்பெற்று அரசருடைய சம்மதத்தையும் பெற்றது. இது அவசரகாரணமாக இவ்வாறு செய்யப்பட்டது.

இந்திய மஹாமந்திரியார் இந்திய ரூபாய் 18 பென்ஸ் ஆக நிர்ணயம்பண்ணப்பட்டிருந்ததை மாற்றுவது இந்தியாவுக்கு நட்டம் என்று கூறி வட்டமேசைச்சமாஜத்திலே தற்போது கூடியிருக்கும் அகில இந்தியப் பிரதிநிதிகளுக்கும் சிற்றரசர்களுக்கும் விண்ணப்பஞ்செய்தனர்.

சிம்லா 22-9-31.

இந்திய இராசப்பிரதிநிதியின் சட்டமஹா சபையிலே, இந்திய மஹாமந்திரியார் பவுண் மாற்று விஷயமாகவும் ரூபாய் விலையைப்பற்றியும் கூறியவற்றைக் கண்டித்து ஆட்சேபிப்பதற்காக, சேர் கௌவாஸ்ஜி ஜெஹங்கீர் ஒரு பிரேரணை அவசரமாகச் செய்வதற்கு அறிவித்தல் கொடுத்து அச்சட்டசபை வேறெவ்வித வேலைகளையும் இதற்கு முன் கவனிக்காதிருக்கும்படி ஒரு அவசிய தீர்மானம் செய்திருக்கின்றனர்

விலைகள் ஏறுகின்றன.

றப்பர், உலோகவகைகள் முதலிய பொருள்களின் விலை மேற்சொல்லப்பட்ட தங்கப்பவுண்விலை ஸ்திரமற்றதாக்கப்படவே, ஏறிவிட்டன.

ஒரு தங்கப்பவுண்-

பிரான்ஸ் நாணயத்தில் 100க்குச் சரியாகும்.

பம்பே, சென்னை முதலிய இடங்களில் இந்த விஷயமாகத் தீர்மானம் நடத்துதற்காக அரசாட்சியார் ஒரு தினம் விடுதலைத்தினமாக்கினர்.

லண்டன் 22-9-31.

றப்பர், வெட்டுக்கொப்பறா, கொப்பறா முதலியவற்றின் விலை ஏற்றம் பவுணின் விலை இறக்கத்தைப் பொறுத்ததாயிருக்கின்றது. இது பணமாற்று விஷயமாக இப்போது இங்கிலாந்திலே நடந்த சட்டத்தின் பயனாயுள்ளது. ஸ்திரமாக விலை ஏறுவது தேவை அதிகப்பட்டாற்றான் நடைபெறும்.

லோட் ஈர்வினும் மஹாத்மாவும்.

ராய்டர் தந்தியின்படி வியாழக்கிழமை லோட் ஈர்வின் யோர்க்ஷையரில் நின்றும் புறப்பட்டுவந்து வெள்ளிக்கிழமை மஹாத்மாவைச் சந்திப்பாராம்.

உலாப் போந்தார்.

லண்டன் 20-9-31.

காந்தியடிகள் காலநிலையின் வசதியை உபயோகப்படுத்திக்கொண்டு வெளியே சற்று உலாப்போந்தார். காலையில் வழக்கம்போல 'பௌ' என்னும் இடத்தில் உலாவினார். பின் 'கிங்ஸ்லி ஹால்' என்னும் விடுதியில் தனது அறையிலே அநேகரை வரவேற்றார். இவர்களுள் வட்டமேசைச்சமாசப் பிரதிநிதிகளும் உளர். பின்னர் 'எப்பிங்' வனத்திற்கு அவர் மோட்டாரதத்திற் சென்று அங்கு இறங்கி அநேக மைல்கள் நடந்தார். தான் மிக்க ஆநந்தத்தை அநுபவித்ததாகக் கூறினர்.

பின்னர் 'பக்கேஸ்ற் ஹில்' என்னும் இடத்தில் ஒரு வீட்டுக்கு அவர் சென்று அங்கு உள்ள ஒரு சங்கத்தாரின் அங்கத்தவர்களுடன் அளவளாவினர். சாயந்தரம மிக நேரஞ்சென்று தனது விடுதிக்கு வந்து சேர்ந்தார்.

போசனசாலையுள் வாணம்.

லண்டன், 20-9-31.

லண்டன் பட்டணத்திலேயுள்ள இந்தியப் போசனசாலை ஒன்றில் வட்டமேசைச் சமாஜப் பிரதிநிதிகளும் மற்றையோரும் கூடியிருக்கும் சமயத்தில் ஒரு வாணம் தெருவிலிருந்து கொளுத்தி எறியப்பட்டது. அங்குள்ளோர் திகிலடைந்தனர். வாணம் விழுந்து புகையையதிகமாகக் கக்கியது. விடுதிச்சாலைக் காரியஸ்தர் தமது காலினால் அதைக் கசக்கிவிட்டனர். அங்கு போசனம் செய்துகொண்டிருந்தவர்கள் கோபங்கொண்டவர்களாய்த் தெருவுக்கு ஓடிப்போனார்கள். வாணக்காரன் ஓடிமறைந்தனன். வாணம் எவ்வித தீமையுமற்றதாகக் காணப்பட்டமையினால் அது வேடிக்கைக்காகச் செய்யப்பட்டதென எண்ணப்பட்டது.

லான்காஷையரைத் தரிசித்தல்.

லண்டன் 18-9-31.

வெள்ளிக்கிழமை இரவு காந்திஜி 'லான்காஷயரை'ச் சேர்வர். அங்கு தொழிலாளர் தங்குமிடத்தில் வசிப்பர். 28-3-31 அவர் லண்டனுக்குத் திரும்புவர். சென்ஜேம்ஸ் மாளிகைக்குச் சமீபமாகவுள்ள 'கிங்ஸ் ஹோசல்' என்னும் விடுதிக்குப் போய் அவர் வசிக்க எண்ணுவதாகத் தெரிகிறது.

தாம் லான்காஷையருக்குப் போவதை உத்தேசித்து அங்குள்ளார் தம்மிடம் கேள்விகளும் குறுக்குக் கேள்விகளும் கேட்கலாமென ஒரு பத்திரிகையில் அறிவித்திருக்கின்றனர். இதனால் அங்குள்ளார் தம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் தப்பபிப்பிராயங்களைத் தாம் மாற்றக்கூடுமெனத் தெரிவித்திருக்கின்றனர்.

குறிப்புக்கொண்ட ஒரு கேள்விக்கு விடை கூறுகையில் இந்தியாவினாலே லான்காஷயரின் புடைவைகளை மாத்திரம் விலக்குவது இந்தியாவின் எண்ணமல்ல, அந்நியத்துணிகள் யாவற்றையும் பஹிஷ்கரிப்பதுவே நோக்கம் என்று கூறினர். லான்காஷயரிலே பருத்திப் பொருள்களின் வியாபாரங் குறைந்தமை இந்தியப் பஹிஷ்காரமேயென ஒத்துக் கொண்டபோதிலும் ஜப்பானே பிரதான காரணமாகுமென்றும் இந்தியாவின் நோக்கம் லான்காஷையரைமாத்திரம் பஹிஷ்கரிப்பதல்ல எல்லா அந்நிய ஆடைகளை பஹிஷ்கரிப்பதே நோக்கம் என்பதை வாசிகர்களுக்கு வற்புறுத்துமாறு கூறினர். லான்காஷையருடன் ஒத்துப்பார்க்கையில் ஜப்பான் மிக முன்னேறிவிட்டதெனவும், மூன்றாவது காரணமாகச் சனங்கள் தங்களுக்குத் தேவைப்படும் தினசரிவாழ்க்கைப் பொருள்களை விலைக்குப் பெறுவதும் குறைந்தமையே காரணங்கள் என்றும் கூறினார்.

இந்திய அச்சுச்சட்டம்.

சிம்லா, 21-9-31.

இச்சட்டம் பலோத்காரமான செய்கைகளையும் கொலையையும் ஊக்கப்படுத்திவிடத்தக்கதான விஷயங்களைப் பிரசுரிக்கும் பத்திரிகைகளை மாத்திரம் பாதிக்கும்.

இப்பிரேரகச்சட்டம், இரண்டு வருடக் கட்டுப்பாட்டையும் முதற் குற்றத்திற்கு 3000ரூ பிணையையும் அப்படிப் பிணைகொடுக்கத் தவறினால் மாத்திரம் அச்சுயந்திரசாலை பறிமுதலாக்கப்படுமெனவும் கொள்கின்றது.

உயர்தர நீதிமன்றத்திற்கு மனுப்பண்ணும் உரிமையும் இருக்கின்றது.

சட்டமஹாசபையிலுள்ள ஐந்து பிரதிநிதிகள் இச்சட்டத்தின் வன்மையை இன்னும் கொஞ்சம் குறைத்தல் வேண்டுமென அபிப்பிராயங்காட்டியிருப்பதினால் வெள்ளிக்கிழமை இப்பிரேரகச்சட்டம் பின்னும் விவாதிக்கப்படும்.

ரூபாய் நாணயமாற்று.

லண்டன் 22-9-31.

வட்டமேசைச் சமாஜத்திலே, காந்தியடிகள் இந்திய ரூபாய் நாணயமாற்று விஷயமாக இந்திய மஹாமந்திரியார் கேட்டுக்கொண்டபடி ஒப்புக்கொள்ளத் தமக்குச் சம்மதமில்லை என்று சொன்னார்.

கார்வின்ஜோன்ஸ், ஜெயக்கார், ஸ்ரீநிவாச சாஸ்திரி ஆகியவர்களின் உபந்நியாசத்தின்பின் மந்திர மன்றத்தின் இரு மந்திரங்களின் தத்துவங்களையும், அமைப்புகளையும், அங்கத்தினர் தொகையையும்பற்றிய விவாதம் நிகழ்ந்தது.

சனாதிகார விஷயமாகச் சமாசம் முடிவு கட்டுவதை உதவி பண்ணுவதற்காக இந்திய அரசாட்சியின் சனாதிகாரப்பகுதியும் லோட் ஷாங்கேயும் தனித்தனி குறிப்புவாசகங்கள் சமர்ப்பித்திருக்கின்றனர். இவை சாதாரணமற்ற நுணுக்க விவரங்களைக் கொண்டன.

கப்பூர்தாலா மஹாராஜாவும் சமாஜப் பிரதிநிதியாக வருவரெனச் சொல்லப்படுகின்றது.

காந்தியடிகள் லான்காஷையருக்குப் போவதை நிறுத்தியிருக்கின்றனர் என்ற வதந்தி தப்பு விளக்கத்தினால் ஏற்பட்டதென்றும், புதன்கிழமை பாராளுமன்றத்திலே எல்லாக் கட்சியினரையும் சேர்த்து ஒரு உபந்நியாசம் செய்வாரென்றும் தெரிகிறது.

காந்திவாரம்.

பம்பே 21-9-31.

ஒக்டோபர் 2உ தொடக்கம் 8உ வரைக்கும் இந்தியா முழுவதும் காந்தி வாரக் கொண்டாட்டம் நடைபெறும். அக் காலங்களில் கதர் மிக விசேடமாக எங்கும் விலைப்படும். இதைக் குறித்துத் தலைவர்கள் தேசத்திற்கு விண்ணப் செய்திருர்கள்.

சுழிபுரம்,
புரட்டாசிமீ ௭உ.

இந்துசாதனப் பத்திராதிபர்
அவர்களுக்கு, யாழ்ப்பாணம்.

ஐயா,

இந்த செப்ரெம்பர் மாதம் நாலாந்தேதி யாழ்ப்பாணக் கச்சேரியிலே மாவரியைப் பற்றி ஆலோசித்தகூட்டத்திலே நானும் வேறு சிலரும் மாவரி தகாதென்றும் தவறணை முறையே வேண்டுமென்று சொன்னோமேயன்றித் தவறணைகளைத் திறந்துவிடச்சொல்லிக் கேட்கவில்லை. தவறணைகளைத் திறக்கச் சொல்லவேணும் திறக்க வேண்டாமென்று சொல்லவேணும் எங்களுக்கு அதிகாரமில்லை. தவறணைமுறை நிலைத்தால் தவறணைகளைத் திறத்தலும் மூடுதலும் ஊரவர்களுடைய சம்மதப்படியே நடைபெறும். இம்முறைப்படியே தான் இரண்டொருவருடங்களின்முன் தவறணைகள் எல்லாம் மூடப்பட்டன.

இங்ஙனம்,
சு. சிவபாத[illegible]ந்தரம்,

வித்தியா விநோத விவேகம்.

:o:

[வண்ணை-வை. இ.]

முன் வெளிவந்தவற்றிற்கு
வினாக்கார ரனுப்பிய விடைகள்.

1-ம் வினாவின் விடை "இந்துசாதனம்"

2-ம் ,, ,, 'குலசேகரபாண்டியன்'
"மகுடம், புலவன், விசேடம், மகரம், குரவன், சபாபதி, கண்டிகை, குடியன், குயவன், பன்னாலை."

முன் வினாக்களுடன் விடைகளையும் உடன் அனுப்பாததை மன்னிக்கவும்.

இங்ஙனம்,
வ. இரத்தினசபாபதி, இணுவில்,

வினாக்கள்.

ஸ்ரீமதி R. சிவசிதம்பரம்,
விளாத்திக்கந்தை.

1. வருங்காலம் நிகழ்த்துரைப்பான் சாஸ்திரியல்ல, வாங்கியுண்ண வழிகாப்பான் முடவனல்ல, சுரும்புமுதல் மலர்முடிப்பான் சுதனுமல்ல, தகளில் பசும்புல்சுமப்பான் தோட்டியல்ல, பருமமுடல் நீறணிவான் பரமனல்ல, பலரில்லம் வசிப்பான் பரதேசியல்ல, சிறந்தவனக்கிளிபோன்ற மொழியினாளே சீரான இக்கதையைச் செப்புவாயே.
2. ஒருசெட்டி இருபத்தைந்து முத்துக்கொண்டு போய் ஒருராசாவைக்கண்டான். அந்தராசன் செட்டியைப்பார்த்து முத்து என்ன விலையென்றுகேட்டான் அதற்கு முதலாவது முத்து பணம்1 இரண்டாவது முத்து பணம்2 மூன்றாவது முத்து பணம்3 இப்படியே கடைசியான இருபத்தைந்தாவது முத்துக்குப் பணம்25 இதன்விலை இந்தப்பிரகாரமென்று சொன்னான். அதுகேட்ட இராசாவானவன் தனக்கு தேவிமார் 5பேர் இருக்கிறபடியால் அவர்கள் ஐவருக்கும் முத்துஞ் சரியாய் விலையும் சரியாய் நீரே பங்கிட்டுக் கொடுமென்று சொன்னான். அது எப்படிப் பங்கிடுவது?

நாடேற்பனசெய்.

அன்பன் எழுதுவது.

நாடேற்பன செய்வதில் நாளும் மனிதவர்க்கமானது ஆதிகாலந்தொட்டே அதிக ஆர்வங் காண்பித்துள்ளது. அன்றியும் அச்செயல்களை அதிக மகிழ்வுடன் வரவேற்றுப் போற்றியும் வந்துள்ளதென்பதைச் சரித்திரங்கண்டோர் காண்பிக்கின்றனர். மனிதர், தம்வாழ்நாளில் விநாடிதோறும் நாட்டுளோரின் பழிச்சொற்களுக்கும், பகைமைகளுக்குமஞ்சியே பெரும்பாலும் தமது வாணாட்களைக் கழிக்கின்றதைக் கவனிக்குமிடத்து, அவர்கள்நாடேற்பனவற்றை நடைமுறையில் நிகழ்த்திவிடினும் அந்நிகழ்ச்சிகள்மீது ஆர்வமும், அன்பும், ஆசையுங்கொள்ளுகின்றனர் என்பது நன்கு கணிக்கப்பெறலாம். உதாரணமாக, சாதாரண குடும்பவாழ்க்கையை எடுத்துக்கொண்டு கவனிக்குமிடத்து இது இன்னும் இனிது புலனாகும். ஒருகுடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும்—பெரியார் முதல் சிறியார்வரை மற்றவர்களால் அற்பவிஷயங்களிற்கூட இகழப்படாததும்,பகைமைபடுத்தக்கூடாததுமானவற்றையே புரிந்துகொள்ளப்பெரிதும் விழைகின்றனர். ஆகவே இவர்கள், குடும்பத்திலுள்ளவர்கள் ஏற்றுப் போற்றத்தக்க செயல்களையே தங்கள் இலட்சியமாகக்கொள்ளுகின்றனர் என்பது கூறாமலே உறுதிப்படுகின்றது. இதன்றியும் அவ்விதம் குடும்பமேற்பன செய்யாவொருவனக்குடும்பத்திலுளனேல் அதனால் அக்குடும்பம் சீர்கேடடைய நேர்வதோடு, அவனும் அக்குடும்பத்தினரால் வெறுத்துப் புறக்கணிக்கப்படவும் நேர்தல் கூடும் இவ்விதமே தான் வெளிவாழ்க்கையிலும் மனிதனது போக்கு அமைந்துள்ளது.

நாடேற்பன செய்வதில் சுவைகொள்ளும் வண்ணம் இயற்கையானது மனிதனின் ஒவ்வொருநாட்சீவியத்திலும் கற்பமைத்துக்கொண்டேயிருக்கின்றது. ஆனால் அதில் எல்லோரும் எல்லாவேளைகளிலும் வெற்றியே பெறுகின்றார்களென்று துணிந்து கூறுவதற்கில்லை. அநேகர் அச்செயல்களை நிகழ்த்துவதிலிருந்து தவறிவிடுதலுங் கூடும். உலகத்தின் எவ்விஷயங்களை எடுத்துக்கொண்டாலும் நிறைவேறுவதும், தவறிவிடுவதும் அதாவது வெற்றியும், தோல்வியும் சர்வசாதாரணமாய் நிகழ்வனவேயாகும். மனிதன் நாடேற்பனவாகவுள்ள நல்ல காரியங்களைப் புரிய எத்தனிக்கையில் அவனது போக்கு, நிலைமை, சந்தர்ப்பம் முதலியனவே முக்கியமாய் வெற்றியையும், தோல்வியையும் அளிக்கின்றனவாயிருக்கின்றன. இதனாலேயே உலகத்திலுள்ள ஒவ்வொருமனிதனும் நன்மையானவற்றைநாடி நாட்டினரால் நன்கு மதிக்கப்படச் சக்தியற்றவனாகிறான், எவ்விதமெனில், அவனது போக்கு, நிலைமை, சந்தர்ப்பம் சிலசமையங்களில் நாடேற்பன செய்தற்குச் சாதகமாயிருக்கலாம். அங்ஙனமே சிலசமையங்களில் அவைகள் எதிராகவும் மாறலாம். களவெடுக்கக்கூடாது, பொய்பேசக்கூடாது என்பது ஒருவனது உறுதியான தீர்மானம். ஆனால் அவனது போக்கு, நிலைமை, சந்தர்ப்பம் ஆகிய இவைகள் தனித்தோ, ஒருமித்தோ நெருக்கிடுகையில் களவெடுக்கவும், பொய்சொல்லவும் நேரிட்டுவிடுகின்றது. ஆயினும் அறிவாளிகளும், முயற்சியாளர்களும் தமது தைரியத்தினால் அம்மூன்றையும் சிறிதுகாலந் தாழ்த்தியாவது தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு நாளும் நாடேற்பன புரிந்து நாட்டினரால் நன்மதிப்பெய்தி தங்கள் நாமம் உலகம் உள்ளளவும் அழியாது பொன்னட்டில் பொறிக்கப்பெற்றுப் பிரகாசமடைகின்றனர். புத்தர், இயேசுநாதர், விவேகானந்தர்போன்ற சமயகுரவர்களும்' டால்ஸ்டாய், லெனின், மகாத்மாகாந்திபோன்ற ஏழைபங்காளர்களும், நெப்போலியன், பிரதாப்சிங், கைமுனுபோன்ற வீரசிகாமணிகளும் நாட்டுநலன் நண்ணி நாடேற்பன செய்ததினாலேயே இன்னும் குன்றாப்புகழ் படைத்துள்ளனர். ஆனால் நாம் தன்னலம் மறந்து, அன்பின் அகிதப்பெருக்கிற்குட்பட்டவர்களாய் இருக்கும்பொழுதும், நடக்கும்பொழுதும், உண்ணும்பொழுதும், உறங்கும்பொழுதும், எத்தொழிலைச் செய்தபொழுதும், எதவஸ்தைப்பட்டபொழுதும் நாடேற்பனசெய்வதில் செல்ல முடியாவிடினும் நமது சாதாரண சீவியத்திலுள்ள அம்சங்களை நாடேற்பனவாகச் செய்தற்கு நமது போக்கையும், நிலைமையையும் ஒழுங்குபடுத்திச் சந்தர்ப்பங்களை எதிர்நோக்கி நிற்றலே நம் ஒவ்வொருவரினதும் வாழ்க்கை இலட்சியமாகக்கொள்வது மிகவும் மேம்பாடுடையதாகும்.

மனிதனது இருவகைச் செயல்களுக்கு முதற்காரணமாயமைந்துள்ளது அவனது போக்கேயாகும். அதாவது குணமாகும். நற்குணமுடையவன் நற்செயல்களையும், தீக்குணமுடையவன் தீச்செயல்களையும் செய்துகொள்வது கண்கூடு. மனிதன் தன் குணத்தை நல்வழியில் செப்பனிட்டுக்கொள்வானேல், அடுத்தபடியாகவுள்ள நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் அநேகமாய் வெற்றியையடைவான். அது அவனது முயற்சியையும், தைரியத்தையும் பொறுத்ததாகும். மூன்றாவதாகவுள்ள சந்தர்ப்பம், எப்பொழுதும் முற்கூறிய இரண்டினும் சித்தியடைந்தவனை எதிர்நோக்கியவண்ணமேயிருந்துகொண்டிருக்கும். மன்பதைகளில் ஒவ்வொருவரும் மேற்கூறியவைகளில் சித்தியெய்தி, தமது தினசரி வாழ்க்கையை நாடேற்பனவாக வகுத்துக்கொள்வதோடு, நாட்டுக்கு நலன் நல்கக்கூடிய துறைகளில் முன்று, நாடேற்பன புரிந்துகொண்டு தமது ஜீவன எல்லையையடைவதே அவர்கள் அடையக்கூடிய பெரும் பேறுகளிலொன்றாமாகும்.

நமது குணத்தைச் செவ்வனே செப்பனிடும் பாதையில் பிரவேசிக்கும்பொழுது முதலில் நாம் பயிலும் பள்ளிக்கூடங்கள் எதிர்ப்படுகின்றன. இங்கேதான் நமது பிற்காலமுங்காலும் நிச்சயிக்கப்படுகிறது. (இவ்விதிக்கு விலக்கானவர்களும் சிலரிருக்கலாம்) நாள்தோறும் போதிக்கப்படும் உலகநீதிகள் நாளடைவில் நம்மில் ஊறிப்போகின்றன. அரிச்சந்திரன், சிபிச்சக்கிரவர்த்தி, அருச்சுனன், கன்னனாகவோ, ஏலேலசிங்கர், கைமுனுவாகவோ மாறவிரும்பும் பள்ளிக்கூடச் சிறுவர் கணக்கிலர். அவ்விதமே சந்திரமதி, சாவித்திரி, தமயந்தி, நளாயினியாகவிரும்பும் சிறுமிகளும் கணக்கிலர். இதேபோன்று தற்கால உலகிற்கேற்ப லிங்கன், மாஜினி, தாசுக்கள், போசுக்களாகவோ, ஆர்க்ஜோன், சரோஜனி, கமலா நேரு, கமலாதேவிகளாகவோ விரும்புவோரும் எண்ணிக்கையிலர். இதுநிற்க, எனது பள்ளிக்கூடவாழ்வில் 'நாடேற்பன'செய்வதைக்கடைப்பிடித்த காலை நிகழ்ந்தவற்றில் இரண்டொரு ரசமான சம்பவங்களை எடுத்துக்காட்டாகக் கூறிக்கொள்ளுகிறேன்.

கோபுவைப்பார்க்கையில் உண்மையில் பரிதாபகரமாயிருந்தது. மறுநாள் அவசியம் ஆயத்தப்படுத்திக்கொண்டுவரவேண்டிய பூமிசாஸ்திர பாடபுஸ்தகமின்மைக்காகப் பெரிதும் ஏங்கினான். பாடமாயத்தம் பண்ணிக்கொள்வதொருபுறமிருக்க, செற்றியிற்கல்லுடன் வெய்யிலிலோ, தலையை மேசையின்கீழோ, முதுகைப் பிரம்பின்கீழோ கொடுத்து நிற்பதைப்பற்றியே மிகப்பெரிதும் ஏங்கினான். அவனது பரிதாபஸ்திதி என்னாற் சகிக்கக்கூடமற்போகவே, சட்டென்று எனது புஸ்தகத்தையெடுத்து, பாடமாயத்தம்பண்ணிக்கொள்ளச்சொல்லி அவனிடம் நீட்டினேன். வாங்குவதற்குக் கையை நீட்டியவன் ஏதையோயோசித்தவனாய்க் கையையெடுத்துக்கொண்டு, 'இதையென்னிடமளித்துவிட்டு, நீ பாடமாயத்தம் பண்ணுவது எவ்விதம்?' என்னுங்கேள்வியைக்கேட்டான். புத்திசாலி! சரியானகேள்வியே கேட்டான். ஆனால் புஸ்தகத்தையவனிடம் நீட்டுகையில் அக்கேள்வியை எனக்குள் நானே கேட்டுக்கொண்டுள்ளேனாகையால், உடனே, "நான் வேறு புஸ்தகம் வாங்கிக்கொள்ளுகிறேன்" என விடைபகர்ந்தேன். "அதெப்படி? இப்பொழுதே வாங்கிக் கொள்ளவேண்டுமல்லவா? அதற்குப் பணம் வேண்டுமே?" என்றகேள்வியை எழுப்பினான். இதுவும் நான் எதிர்பார்த்ததாகவே, "ஆம் ஆனால் அது என்னைப்பொறுத்தது. நீ இதைக்கொண்டு செல்லலாம்", எனக்கூறினேன். இத்துடன் அவன் புஸ்தகத்தைப் பெற்றுச் செல்வானெனவும் நினைத்தேன். நான் நினைத்ததுஞ் சரியே. இதுவே உலகவழக்கில் உள்ளதும், ஆனால் நான் ஏமாந்துபோனேன். அவன் கையை நீட்டாமலே "நீ கூறுவது சரிதான். முதலில் புஸ்தகக்கடை சென்று புஸ்தகம் வாங்கப்போகலாம்வா" என்றுகூறிக்கொண்டே என்கையைப்பற்றினான். நான், "கோபு! போகும் வழியில் வாங்கிக்கொள்ளுவேன், நீ எதற்காக அலையவேண்டும்?" என்றேன் "ஏன், நானும் உடன் வருவதால் உனக்கு என்ன அசந்தர்ப்பம் நேரிடப்போகிறது? ஒன்றுமில்லையே, பின் ஏன்?" என்றுசொல்லிப் பற்றியகையைப் பிடித்திழுத்தான். நானும் 'சரி' போட்டுக்கொண்டு நடந்தேன். புஸ்தகசாலை சென்று நான்வேறு புஸ்தகம் வாங்கிக்கொண்டபின்னரே அவன் எனதுபழையபுஸ்தகத்தையேற்று 'வந்தனம்' சொல்லிச்சென்றான். (வரும்.)

S. மயில்வாகனம்,

பகவான் சந்நிதானமும், பந்தடிகாரரின் தொந்தரவும்; நகரசங்கத்தாரின் உதவியும்.

மூர்த்தி தலம் தீர்த்த முதலியனவற்றுற் சிறந்தோங்கியதும், எத்தனையோ பல ஆண்டுகட்கு முன் இயற்றுவிக்கப்பட்டதும், ஆயிரக்கணக்கான இந்துக்களால் வணங்கப்பட்டுவருவதுமான கொழும்பு முகத்துவாரத்திலுள்ள சர்வாதசித்தி விநாயகர் கோவிலுக்கு முன்பாகச் சிறிது காலத்தின்முன் நகரசங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட பந்தடி மேடைகளாலும், பந்தடிகாரராலும் ஏற்படுந் தொந்தரவுகளை, பலமுறைகளிலும் புத்திசாதுரியமிகுந்த உத்தமரான மேற்படி சங்கத் தலைவருக்கும் அங்கத்தவர்களிற் சிலருக்கும் எடுத்துக்கூறியும் அதற்குச் சரியான பரிகாரம் இதுவரையில் நடத்தாததைப் பற்றி இந்துக்களாயுள்ளவர்கள் எல்லோரும் மிகவும் வருந்துவதற்குண்டான முறையில் அரசாங்கத்தார் நடத்திக் கொண்டிருப்பது மிகக் கவலைக்கிடமாயிருக்கின்றது.

உலகத்தில் பல்வேறு மதங்களிருப்பினும் அவ்வவர் மதாசாரப்படி ஆலயங்கள் அமைத்துக்கொள்ளாத மதங்கள் ஒன்றுமேயில்லை. ஆனால் எந்த மதஸ்தரும் தங்கள் தங்கள் ஆலயங்களில் தங்கள் தங்கள் சமயாசாரப்படி கடவுளை வணங்குவார்களன்றோ! அங்ஙனம் பயபக்தியோடு வணக்கஞ் செய்யும்போது பிறரால் இழைக்கப்படும் எதிரிடையான எவ்வித தொந்தரவுகளையும் சகிக்கமாட்டார்களென்பது மேற்படி சங்கத்தார்களுக்கும் மற்றுமுள்ள எல்லோருக்கும் புலப்படுமன்றோ! அப்படித் தெரிந்திருந்தும் இப்பந்தடிமேடைகளை ஏற்படுத்த முன்வந்த அங்கத்தவர்களின் புத்திசாதுரியத்தைப்பற்றி வருந்தாமலிருக்க முடியவில்லை

மேற்படி அங்கத்தவர்கள் சைவசமய உணர்ச்சி இல்லாதவர்களாகையால் இப்பந்தடி மேடைகளை ஆலயங்களின்முன் ஏற்படுத்த முன்வந்துள்ளார்கள். ஆயின் அதற்குச் சார்பாக நின்று வாக்குரிமை கொடுத்தவர்களுக்கும் சைவசமய உணர்ச்சி இல்லாதுபோனாலும், “சமய இடையூறு” நிகழுமேயென்ற உணர்ச்சியாவது மேற்படியார்களின் மனதிற் றோன்றியிருக்குமே. அதையாதல் அவர்கள் கவனித்து இந்துப் பொதுசனங்களின் மனதைப் புண்படுத்தாமல் நடந்துகொள்ளத் தெரியாதது மிகவும் விசனிக்கத்தக்கதே.

“இம்மேடைகளை அமைக்கக் கோரிக்கை செய்யும்பொழுதே, இதே கிளர்ச்சியைச் செய்திருந்தால், அமையாதிருக்கக் கூடுமல்லவா!” என்றொரு கேள்வி கேட்கப்படலாம்: ஆனால், பொது இந்துசனங்களின் அபிப்பிராயத்தைத் தழுவி ஸ்தாபிக்கப்படவேயில்லை. அப்படிக் கேட்டிருந்தாலும் பொதுவாக ஒருவருமே தங்கள் வாக்குரிமைகளைக் கொடுத்திருக்கமாட்டார்கள்.

கோவிலிலே பத்தி விசுவாசத்தோடு வணங்கும் அடியார்கள்மேலே பந்தடிகாரரின் பந்துகள் வந்து விழவும் அவர்கள் மனம் புண்ணாக வணக்கஞ் செய்வோரையும், ஆலயத்தையும் அவமதிப்பதற்குண்டான முறையில் மேடைகளிருப்பதால், வீண் சச்சரவுகள் வளர்ந்துகொண்டே வரும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இம்மேடைகளில் விளையாடும் நண்பர்கள் எவ்வளவோ சிநேகமான முறையில் நடந்து கொள்ளுகின்றார்கள் என்பது நேரிற் காண்பவர்க்கே நன்குபுலனாகும்.

அரசாங்கசட்டம் அமுலிலிருந்தும், சட்டப்படி (100) நூறுயாருக்குட்படத் தேவாலயங்களில் சமீபத்தில் மேளவாத்தியங்கள் நிறுத்தவேண்டிய பிரமாணம் இருக்கவும், மாதத்திலிருமுறை (C. L. I.) சி. எல். ஐ. பேண்ட் வாத்தியம் கோவிலுக்கு மிகச் சமீபத்தில் (20) இருபதடி தூரத்துள் அடிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். இதனால் என்ன நேரிடும்? அறிவாளிகளே! சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!!

பந்தடி மேடையில் எவ்வெவ்வித விளையாட்டுக்கள் நடைபெறுகின்றன. அவை எல்லாவற்றிற்கும் அவ்விடம் போதுமானதா! “கிறிக்கற்” என்னும் விளையாட்டுக்கே ஓர்பகுதி இல்லாமலிருக்கும்போது, கிறிக்கற், வுட்போல், வொலிபோல், சுற்றுஊஞ்சல், ஊஞ்சல், பெட்டிஊஞ்சல், பெரலல்பார், ரூக்கை முதலிய விளையாட்டுகள் நடைபெறுகின்றன. அன்றியும், நகரசங்கத்தாரின் அறிக்கை: சிறுபிள்ளைகள் மாத்திரமே விளையாடுதற்கு ஆம். ஆனால் 35 வயதின் மேற்பட்ட குடும்பஸ்தர் முதலாயினோரும், இடையிடையே சிறுபிள்ளைகளுடன் கலந்து விளையாடுகிறார்கள். பந்தைத் தடுப்பதற்குப் போடப்பட்ட வலையில் பந்து தடைப்பட்டு நிற்பதாகத் தெரியவில்லை. அவ்வேலிவலை இப்போதிருக்கும் உயரத்திலிருந்து இன்னும் இவ்வளவு 100 அடி உயரத்திற்கு உயர்த்திப் போட்டாலன்றி பந்து நிற்கப்போவதில்லை. ஆகையால் இவ் விஷயங்களை இம்மாகாணப் பிரதிநிதிகள் கவனிப்பார்களா! பார்ப்போம். ஏழைசொல் அம்பலத்துக் கேறுமா! இதற்கு அம்பலத்திலாடுகிற அண்ணலே அருள்புரிய வேண்டும்.

சி. சுப்பிரமணியம்.

[இம்முறைகேடுகளைக் கண்டிக்கவேண்டியவர்கள் கொழும்பிலுள்ள சைவாபிமானப் பெரியார்களேயாகும். மேலும், அரசாங்க சபைக்குப் பிரதிநிதித்துவம் படைத்திருக்கும் டக்டர் சரவணமுத்து முதலிய தமிழ்மக்களும் தமது பிரதிநிதித்துவம் ஏதுந்தத்துவமுடையதாயிருப்பின் இதுவிஷயமாக உழைத்து நிற்கலாம். அல்லது வேறெவ்விதமாகவேனும் இலங்கை மக்களின் ஒருசாராராகும் இந்துக்களின் முறையீட்டை அரசினர்க்கெடுத்துரைக்கலாம். உரையாது விடுகிற குற்றம் இவர்களையும், உரைத்தும் அரசினர் அவமதிப்பரேல் தோஷம் அரசினரையும் பற்றும். ப-ர். இ-ம்.]

இது உம்முடைய தொந்தரவுகளையும் கிலேசங்களையும்நீக்கும்
—நிகச் சொற்பவிலையில் வருடம்
—முழுவதும் நற்சுகம் உமக்கு உண்டா
—கும். எப்படியென்று பாரும்.
—சொற்பபணத்தைச் செலவு
—செய்து
லி
ஓ மருந்துப்
பா பெட்டியை
வாங்கும்.
இதில்:—
—லிட்டில்ஸ் ஓறியன்ரல் பாமில்
—ஒரு சீசா,
—ஹென்றீஸ் ஜ்வரஹரி
— ,, ஓமம் கற்பூர்
— ,, கில்லர கோல்ட்
—லி. ஓ. பா. இரமல் வில்லைகள்
— ,, பேதிமாத்திரைகள்
8 — ,, சர்ம சம்ரக்ஷணி
— ,, அர்க்கத்தமாற்றி
முதலிற் சொல்லப்பட்ட மருந்தின் தனிவிலை கிதமாத்திரம்,
4
அதாவது ரூபா 3, அணா 8. தபாற் செலவு பிரத்தியேகம்.
சாதாரணமான ஒவ்வொரு வியாதிக்கும் நம்பிக்கையான ஔஷதம். சுலபமானது. ஆனால் சக்தியுள்ளது, அநுபவத்திற் கண்டது. அநேகரால் கைக்கொள்ளப்படுவது.
இதில் ஒருபெட்டியை உமது வைத்திய வியாபாரியிடம் வாங்கும்
அல்லது நேரே எழுதுவது:
லிட்டில்ஸ்
ஓறியன்ரல்பாம் டிப்போ,
பெரியதெரு,
மணிக்கூட்டுச்சந்தி,
கொழும்பு.
தபாற்பெட்டி இலக்கம் 298, அல்லது,
லிட்டில்ஸ் ஓறியன்ரல்பாம் அன்ட் பார்மசியூட்டிக்கல்ஸ் லிமிட்டெட்,
தபால்பெட்டி 67,
சென்னபட்டணம்.
X 9, 1 31—12 32)(C)

சைவத்திருநெறித் தோத்திரத்திரட்டு.

சைவசமயிகள் பாராயணஞ் செய்தற்கும், சைவவித்தியாசாலைகளிற் சமயபாடமாக உபயோகித்தற்கும் பயன்படும் வண்ணம் இத்தோத்திரத்திரட்டு நவமாகத் தொகுக்கப் பெற்றுளது. இதன்கண் அகத்தியர் தேவாரத்திரட்டு (முழுவதும்) திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், பட்டினத்தடிகள் திருப்பாடல், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, தாயுமானவர் திருப்பாடல், முதலியன முறையே தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் விநாயகக்கடவுள், சிவபெருமான், நடராசர், தக்ஷிணாமூர்த்தி, வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், அரிகரபுத்திரர், (ஐயனார்) சிவசத்தி, சிவகாமியம்மை, துர்க்கை, இலக்குமி, சரசுவதி, திருநந்திதேவர் முதலாம் மூர்த்திகளுக்கும், சமயகுரவர்க்கும் சூரியமூர்த்திக்கும், சண்டேசுவரருக்கும் உரிய தோத்திரங்கள் மரபாக வகுக்கப் பெற்றுள்ளன. இதனை ஒரு பூரணமான தோத்திரத்திரட்டெனச் சொல்லலாகும். 128 பக்கங்கள் வரையிற் கொண்டது. 470 அருட்பாக்களைக்கொண்டது. சாதாரணகட்டுவிலை சதம் 30 (அணா 5.) தடித்த மட்டையோடு கூடிய கட்டு சதம் 40. பிரதிகள் இந்துசாதன ஆலயத்திற் பெறற்பாலன. தபாற்செலவு வேறு.

வண்ணார்பண்ணை, } மனேஜர்.
இந்துசாதனாலயம்.

The Prudential Assurance Co., Ltd.
புறுடென்ஷல் வீமா கொபனி.
1930-ம் ஆண்டின் கணக்கால்
ஆதாய நன்கொடை.
வீமாத்திர்ந்த ஒவ்வொரு 1000ரூபாவுக்கும் பூரண ஆயுள் வீமாக்களுக்கு (Whole Life Policies) ரூபா 26/- வீதமும், தவணை குறித்த வீமாக்களுக்கு (Endowment Policies) ரூபா 23/- வீதமும் கொடுக்கப்படும்.
ஒவ்வொரு வருஷமும் இத்தகைய பெரும் தொகையான ஆதாய நன்கொடைகளைக் கொடுக்கக்கூடியதும் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் மிகப் பெரியதுமான இக்கொம்பனியில் 2,61,00,000 பேர்கள் உரித்தாளராய்ச் சேர்ந்திருந்து மேற்கூறிய ஆதாயங்களில் பங்குபற்றிவருகிறார்கள். தாமும் அவர்களுடன் சேர்ந்து ஆதாயம் அடையவிரும்பின் விபரங்களுக்கு உடனே எழுதவும்.
டெல்மீஜ் போர்சைத் அன்ட் கோ., லிமிட்டட்.
பிரதான ஏஜண்டுகள், கொழும்பு.
Principal Agents in Ceylon, Delmege Forsyth & Co. Ltd., Colombo.
(Y. 11. 19 to 31-12-31) வ.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டமூச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதியில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

இல.	திக.	பெயரும் ஊரும் நகைகளின் விபரம்.	ரூபா.
4980	16-4-30	சின்னத்தம்பி இராசையா கோண்டாவில் மேற்கு தாயித்து ஒன்றும் தடை 2ம உள்பட அடம்பன் கொடிச்சங்கிலி1	120
5059	6-5-30	மு. க. அ. ச. முகம்மது லப்பை ஜெக் ஸ்டோர் பெரியகடை சிறுபிள்ளை அரைஞாண்கொடி1	20
5077	10-5-30	இராமலிங்கம் சுப்பையா வெள்ளாத்தெரு வண்-மேற்கு திருகு ஒன்றில்லாத பீலிக்காப்பு சோடி1	30
5107	16-5-30	பொன்னம்பலம் நமசிவாயம் வீமன்காமம் தெல்லிப்பழை லவுங்கப்பூச்சங்கிலிமாலை1	100
5185	30-5-30	வல்லிபுரம் செல்லையா கந்தர்மடம் பழையறோட்டு கலாவளை மோதிரம் 1, புரூச் 1, கோதுமை அச்சுக்காப்பு சோடி1	60
5333	5-7-30	சிவசிதம்பரம் முருகேசபிள்ளை வட்டுக்கோட்டை கிழக்கு தாயித்துடன் இரண்டுபட்டுக் குண்டுச்சங்கிலி	150
5348	11-7-30	T குணரெத்தினம் சிறும்பியடி தொங்கல்உள்பட இரட்டைவளையல் சங்கிலி1	40
5466	4-8-30	ஆறுமுகம் கந்தையா கலட்டி ஒற்றை அச்சுக்காப்பு1	10
5474	4-8-30	முத்துவேலு விஜயரத்தினம் ஆனைப்பந்தியடி தாயித்துடன் சதுரக்குண்டுச் சங்கிலி1	35
5500	9 8-30	கிருஷ்ணர்கோபாலு பெருமாள்கோவிலடி முகப்பில்லாகசுரையுள்ள கம்பிப்பூரான் அட்டியல்1	18
5568	21-8-30	மீராசாகிப்பு முகம்மது சுல்த்தான் நம். 245, பெரியதெரு சோனகதெரு சவடி தொங்கல் சறட்டுக்கொடி1	43
5590	27-8-30	பரமு கந்தையா சிவியாதெரு மேற்கு இரட்டை வளையல் சங்கிலி அட்டியல்1	25
5600	30-8-30	வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை மானிப்பாய் வடக்கு தாயித்துடன் சதுரக் குண்டுச்சங்கிலி1	30
5613	1-9-30	செல்லப்பா சின்னையா கோண்டாவில் வடக்கு 2 கல்லில்லாத முகப்புள்பட திருகு ஒன்றில்லாத பீலிக்காப்பு சோடி1	50

விற்பனவு:—பிரசோற்பத்திவருஷம் புரட்டாதி மாதம் 21உக்குச் சரியான 1931-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7-ந் திகதி புதன்கிழமை காலை 9மணியளவில் எடுபட்ட நகை புறநீக்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
வெந்தில் மேஸ்த்தர்.

(Mis 370. 21&24)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S. Adchalingam, residing at Ayanarkovilady, Van: West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna